www.tamilarangam.net

# சுமைகள்

சுமைகள்-17 தை,மாசி,பங்குனி 96 Sumaihal Nr. 17, Januar/februar,Mars1996, Tromsø, Løssalg kr. 10,-

## பேர்கன்!

## சமாதான மாநாடும் பேச்சு வார்த்தை முயற்சிகளும்!

இந்தமாதம் 26ம் திகதி பேர்கனில் நோர்வே அரசியல் கட்சிகளின் இலங்கை ஆதரவுக்குழுவும், (CMI) கிறிஸ்டியன் மிச்சல்சன், சமூகவியல் ஆய்வு நிறுவனமும் இனைந்து இலங்கையில் சமாதானம் சர்வதேச நாடுகளின் கடமை என்ற தலைப்பில் ஒருநாள் மாநாடொன்றை நடத்தினர்.

இம்மாநாட்டில் புலிகளுடன் ஐக்கிய தேசியக் கட்சிப் பிரதிநிதியும் கொழும்பு பல்கலைக்கழகப் பேராசிரியர் இலங்கையில் சமாதானம் ஏற்படுவாற்கு ஏதுவதற்கான பொதுசன இயக்கத்தின் தலைவர் ஜெகன் பெரேராவும் கலந்து கொண்டனர். .

மேற்கூறிய இலங்கையர்கள் அனைவருடனும் நோர்வே வெளிநாட்டமைச்சின் செயலாளர் Jan Egland, நோர்வே பழமைவாதக் (Høyre) கட்சியைச் சேர்ந்த Erna solborg, மற்றும் இலங்கைக்கான சர்வதேச அமைப்புக்கள் கூட்டின் செயலாளரும் மாநாட்டில் உரையாற்றினார். மாநாட்டில் நோர்வே பாரளுமன்ற உறுப்பினர்கள் தலைவர், இலங்கைக்கு உதவிவளங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் சமூகசேவை ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இவர்களை விட நோர்வே புலிகளின் பிரதிநிதிகளும், தமிழ் சங்கங்கள், மற்றும் அமைப்புக்களின் பிரதிநிதிகளும், தனிப்பட்ட சிலரும் கலந்து கொண்டனர். மாநாடு 3 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

1) இலங்கை அரசியல் வரலாறும் தேசிய இனப் பிரச்சனைக்கான கரணிகளும்.

2) இலங்கை தேசிய இனப்பிரச்சனைக்கான தீர்வு என்ன? எந்த வகையில் தீர்த்து வைக்கலாம்? சந்திரிக்கா அரசின் தீர்வுப் பிரேரனை தேசிய இனப்பிரச்சனைக்கு தீவாகுமா?

3) சர்வதேசப்பார்வையில் இலங்கையின் இனப்பிரச்சனையும் நோர்வேயின் சர்வதேச சமாதான முயற்சிகளின் அனுபவமும். இலங்கைக்கு சமாதானத்தை ஏற்படுத்த சர்வதேசப்பங்களிப்பும்

**1) இலங்கை அரசியல் வரலாறும் தேசிய இனப் பிரச்சனைக்கான அடிப்படைக் காரணிகள் ஆகும்.**

இத்தலைப்பில் கோழும்புப் பல்கலைக்கழக பேராசிரியரும், ஜெகன் பெரேராவும் உரையாற்றினர். இருவரின் உரையும்:- ஜெகன் பெரேராவும், பேராசிரியரும் தமது உரையில் ஒருமாதிரியான வரலாற்றை முன்வைத்தனர். வேறுவேறு முறைகளில் இருவரின் கட்டுரைகளும் அமைக்கப்பட்டிருந்த போதும், தேசிய இனப்பிரச்சனைக்கு அடிப்படைக் காரணிகளைப் பற்றியும், இலங்கை அரசியல் வரலாற்றைப் பற்றியும் ஒரே மாதிரியான கருத்தையே இருவரும் தெரிவித்தனர். இருவரின் உரையின் முக்கியமான கருத்துக்களைத் தொகுத்துக் கூறப்போவதாகில்.

இலங்கையின தேசிய இனப்பிரச்சனைக்கும், காலணித்துவ கால அரசியலுக்கும் முக்கிய தொடர்புண்டு. எந்த சக்தி இலங்கையில் ஆட்சியில் இருந்ததோ அச்சக்திகள் எல்லாம் தமது குறுகிய குழுநலனையும், சுரண்டிக் கொழுக்கும் வளிகளில் அக்கறை கோண்டனவே ஒளிய மக்கள் நலனில் அல்ல. வரலாற்றை வரையறுத்து ஆங்கிலேய காலத்தில் இருந்து ஆராய்வோமாகில் மேற்கொண்ட கருத்து வலுப்பெறும். ஆங்கிலேயர் காலத்திலேயே தேசிய இன முரண்பாட்டிற்கு வரலாற்று முகம் கொடுக்கப்பட்டது.

14 பக்கம் பார்க்க ☞

உலகத்தொழிலாளர்களே ஒடுக்கப்பட்ட மக்களே ஒன்று சேருங்கள்!

# இனவாதக் கோரமும் சிறுபாண்மை மக்களின் பாதையும்

(றயாகரன்)

தேசவிடுதலைப் போராட்டம் அதன் போக்குகளில் மக்களின் துன்பங்கள் முடிவற்றுத் தொடர்கின்றது. பாசிச சிங்கள இனவெறி அரசு தமிழ் தேசிய இனத்தின் உயிர் மூச்சையே நசுக்கி அழித்துவிட கங்கனம் கட்டி பாரிய யுத்த முன்னெடுப்புக்களை முன்னெடுத்து வருகின்றது.

இந்த நிலையில் புலிகளின் மக்கள் விரோத நடவடிக்கையின் விளைவாக கடந்த 15 ஆண்டுகளில் அரசுக்கு எதிராக போராடிய பலரைக் கொண்றும், சிறையில் அடைத்தும் தேசிய இன அடையாளத்தை இன்னுமொரு புறத்தில் அழிக்கின்றனர். ஒரு போராட்டம் என்பது அதன் அனைத்து சக்திகளையும் அரவனைத்து செல்வதில் தான் வெற்றி அழிக்கின்றது. முஸ்லீம் சிங்கள அப்பாவி மக்களஇ மீதான தாக்குதல்கள் எல்லாம் இன்னும் தேசவிடுதலைப் போராட்டத்திற்கு பாதகமான அம்சங்களாகும்.

இந்தவகையில் இன்று யுத்தம் வெல்ல முடியாத ஒரு தற்காப்பு யுத்த எல்லைக்குள் மிளமிளத் தொடர்வதும், அதன் விளைவுகள் தமிழ் மக்களையும், இலங்கையின் மொத்த அப்பாவி மக்களையும் எப்படி பாதிக்கின்றது என இக்கட்டுரை மூலம் ஆராய முயல்கின்றேன் 1993 களில் ஆசியாவில் பாகிஸ்தானுக்கு அடுத்ததாக இலங்கையே தனது வருமானத்தில் இராணுவத்திற்காக அதிகம் செலவழித்த நாடாக மாறியிருந்தது. இதன் மூலம் 1993 முந்தைய 10 வருடத்தில் 22000 கோடி பணத்தை யுத்த முனையில் எரித்து நாசமாக்கியுள்ளது. எந்த மீள் உற்பத்தியும் அற்ற 22000 கோடிபணம் என்பது இலங்கையின் படுமோசமான அழிவுக்கு இட்டுச் செல்கின்றது. 1993 இல் நாள் ஒன்றுக்கு 40 பேர் கொல்லப்பட்ட நிலையில், வடக்குக் கிழக்கில் மொத்தமாக 60,000 பேர் கொல்லப்பட்டனர். இதைவிட 5000 பேரை காணவில்லை. இதே நேரம் 1993 இல் இராணுவச் செலவு 3,600 கோடியாக உயர்ந்தது.

இந்த யுத்தக் கெடுபிடிகள் என்பது தனது அரசியல் லாப நோக்கில், மேல்மட்ட செல்வந்தர்களின் கணவுகளை ஈடுசெய்ய தொடரப்படுகின்றது. ஒடுக்கப்பட்ட அடிநிலை மக்கள் தங்கள் வறுமையின் கோரத்தை மூடி மறைக்கவும், அவர்கள் கிளர்ந்தெழுந்துவிடாது தடுக்கவும் இன்று இவ்யுத்தம் தொடரப்படுகின்றது. இதன் விளைவுகள் மூலம் 1993 இல் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் அகதிகள் முகாம் பெருக்கெடுத்தது. நாடு முழுவதும் 531 அகதிகள் முகாம்களில், மற்றும் தனிப்பட்ட அகதிகளாகவும் மொத்தமாக 12 லட்சத்து 50 ஆயிரம் பேர் அகதிகளாக புலம் பெயர்ந்தனர்.

இது மட்டக்களப்பில் 16,907 குடும்பத்தைச் சேர்ந்த 76,530 பேராக இருந்தது. யாழ்பாணத்தில் 80,271 குடும்பத்தைச் சேர்ந்த 2,65,091 பேர் குடிபெயர்ந்தனர். இது கிளிநோச்சியில் 40,889 பேராகவும், மன்னாரில் 54,760 பேராகவும், வவுனியாவில் 11,407 பேராகவும் திருகோணாமலையில் 33,727 பேராகவும், முல்லைத்தீவில் 30,139 பேராகவும் அம்பாறையில் 23,139 பேராகவும் காணப்பட்டது.

இதனைவிட நாட்டில் பலபாகத்திலும் அகதிகள் புலம் பெயர்ந்து உள்ளனர். இதைவிட நாட்டுக்கு வெளியில் சிலலட்சம் பேர் பெயர்ந்துள்ளனர். இது மேற்கு நாடுகளில் 2 லட்சத்துக்கு மேலாகவும், இந்தியாவில் ஒரு லட்சத்துக்கு மேலாகவும் உள்ளனர். இதைவிட 1994 இல் அமினஸ்ரியின் அறிக்கைப் படி வடக்குக் கிழக்கில் மட்டும் 10 ஆயிரம் பேர் காணாமல் போயுள்ளனர்.

இந்தநிலையில் யுத்தத்தைத் தொடர எல்லாவித முனைவுகளையும் பயன்படுத்தி நாட்டை அழித்து வருகின்றனர். இராணுவபலம் மிகவேகமாக அதிகரித்துச் சென்றவண்ணம் உள்ளது. 1980 களில் இராணுவம் 15,000 பேராக மட்டுமே இருந்தது. இது 1985 இல் 21,500 பேராக அதிகரித்த அடீத நேரம் தற்காலிகமான 18,200 பேரையும், 14,500 பொலீசையும் கொண்டிருந்தது. இதைவிட பாராளுமண்ற உறுப்பினர் பாதுகாப்புப் படை 5,000 ஆக இருந்தது. இது 1993 இன் நடுப்பகுதியில் இராணுவம் 70,000 ஆகவும், கடற்படை 10,000 மாகவும், விமானப்படை 8,000 மாகவும், பொலீஸ் 30,000 மாகவும் கெரில்லா எதிர்ப்புப் படையணி 12,000 மாகவும், தேசிய பாதுகாப்பப் படையில் 15,000 மாகவும், இதைவிட மற்றைய பிரிவுகள் 13,000 பேராகவும் காணப்பட்டது. இது மொத்தமாக 1லட்சத்து 58 ஆயிரம் படையாட்களாக 1993 இல் அதிகரித்தது. இது இன்று மேலும் பலமடங்கு பெருகிஇருக்கும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

இராணுவச்செலவைப் பொறுத்த வரையில் 1978 இல் 56 கோடியாக இருந்தது. 1986 இல் இது 886 கோடியாக அதிகரித்தது. இது 1992 இல் 1600 கோடியாகவும், 1993 இல் 3600 கோடியாகவும் அதிகரித்தது. 1993 இல் மொத்த தேசிய வருமானத்தில் 40 வீதம் யுத்தத்திற்காக செலவுசெய்யப்பட்டது. 1992 இல் 1 வீதமாக இருந்த பாதுகாப்பு வரி 1993

இல் 3 வீதமாக அதிகரித்தது. பின் பாதுகாப்பு வரி 1993 இறுதியில் 3.5 வீதமாக அதிகரிக்கப்பட்டது.

யுத்தம் என்ற போர்வையின் கீழ் கொழுத்த பணக்காரன் மேலும் பணக்காரனாக மாற கீழ்பட்ட மக்கள் மேலும் ஏழைகளாக முறிவருகின்றனர். அக்களின் அடிப்படைத் தேவைக்கு ஒதுக்கிய பிச்சைக் காசுகள் கூட வேட்டுக்கு உள்ளாகி வருகின்றது.

1990 இல் மொத்த மக்கள் சேவைக்கு ஒதுக்கிய பணம் மொத்தமாக 13.5 வீதமாக இருந்தது. 1991 இல் 7.4 விதமாக குறைக்கப்பட்டது. அதன் உட்பிரிவுகளைப் பார்போமாயின்

மக்களின் அடிப்படைத் தேவைகளை அரசு ஒருபுறம் வெட்டவும், மறுபுறம் யுத்தம் அதைச்சுடுகாடாக்கின்றது. அற்பவருமானத்தையும் காலம் காலமாக சிறு சேமிப்புக்களையும் கூட சாம்லாக மாற்றிவருகின்றது இந்த யுத்தம். இதைஒட்டிக் கிடைத்த தகவல்களை தொகுத்துப் பார்கும் போது அவை அதிர்ச்சியூட்டக் கூடியனவாக உள்ளது.

1993,94 களில் 10-14 வயதுடைய ஒவ்வேரு ஐந்து பேருக்க ஒருவர்வீதம் பாடசாலை செல்லவில்லை. அதாவது 20 வீதம் பேர் பாடசாலை செல்லவில்லை. 19 லட்சம் குழந்தைகளில் 2 லட்சத்து 50 ஆயிரம் பேர் வேலைகளில் ஈடுபட்டிருக்கின்றனர். இதைவிட 1 லட்சம் குழந்தைகள் அகதி முகாம்களிலும், 20,000 குழந்தைகள் வேலையிலும் 10 ஆயிரம் குழந்தைகள் வீதிகளிலும் வசிக்கத் தொடங்கியுள்ளனர். இதைவிட 10,000 சிறுவர்கள் பாலியல் தொழிலில் வெள்ளைக்காறனுக்கு கூட்டிக் கொடுத்து எயிட்காவிகளை உருவாக்கி வருகின்றனர்.

1993 இல் அரசு புள்ளி விபரப்படியே 90,000 குடும்பங்கள் மீன்பிடி தொழிலை இழந்து அன்றாட வருமானத்தையே இழந்துள்ளனர். 1993 மேயில் வாழ்க்கைச் செலவு 10 வீதமாக இருந்தது. யூனில் அது 12.3 வீதமாக அதிகரித்தது. இந்தவகையில் வாழ்க்கைச் செலவு அதிகரித்துச் செல்கிறது. மரணவீதம் வடக்குக் கிழக்கில் என்றும் இல்லாதவாறு அதிகரிக்கிறது ( இது யுத்தத்தில் இறப்பவர்களை விட்டேயாகும்) இந்தவகையில் யுத்த கோரமும் அதன் இனவாத முகமும் மக்களை படுமோசமான வாழ்நிலைக்கு இட்டுச் செல்கிறது.

பாடசாலைக் கல்வியில் திட்டமிட்டே இனவாதம் புகுத்தப்பட்டிருப்பதை கீழ்உள்ள புள்ளி விபரம் விளக்குகிறது.

அதாவது ஒரு ஆசிரியர் தமிழ் மொழிமாணவர்கள் 43 பேரை கற்பிக்கும் அதே நேரம் ஒரு சிங்கள ஆசிரியர் தமிழ் மொழி மாணவர்களின் மொத்தத் தொகையில் அரைவாசி சிங்கள மாணவர்களை கற்பிக்ககூடிய வகையில் இலகுபடுத்தப்பட்டு தமிழ் மொழி மாணவர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர்.

நாட்டில் உள்ள மொத்தப் பாடசாலை 10,000 மாகும் இதில் 2000 மிகப்பின்தங்கிய பாடசாலைகள். இதில் மலையகத்தில் 800 பாடசாலைகள் உள்ளன. இதன் மூலம் மலையகமக்களின் கல்லியை இனவாதநோக்கில் திட்டமிட்டே முடக்கி வருகின்றனர்.

இன்று நாம் நாட்டைப் பார்க்கும் போது உயர்கல்வியில் பல்கழைக்கழகம் செல்லும் தகுதியை 45 ஆயிரம் பேர் அடைகின்றனர். ஆனால் அதில் 9 ஆயிரம் பேருக்கு மட்டுமே பல்கழைக்கழக அனுமி வழங்கப்படுகின்றது. அதில் பலர்கூட வேலையின்றி உள்ளனர் என்பது கவனிக்கப்படவேண்டியது. இங்கு இந்த 9 ஆயிரம் பெரை தெரிவு செய்ய தரப்படுத்தல் முறை புகுத்தப்படுவது இனவாதத்தின் ஒரு ஊற்று மூலமாகவே தொடர்கின்றது. இலங்கைக்கு ஏற்ற ஒரு கல்வி முறை உருவாக்கத் தவறி பல்கழைக்கழக த்திற்கு 9 ஆயிரம் மாணவர்களை தெரிவு செய்ய 2லட்சம் மாணவர்கள் தயார் செய்யப்பட்டபின் அவர்கள் துக்கி எறியப்படுகின்றனர். எந்த நோக்கமும் இன்றி படித்த கல்வி எந்ப்பிரயோசனமும் இன்றி, இலங்கைப் பொருளாதாரக் கட்டமைப்பை வளர்க்கும் வகையில் இம்மாணவர்கள் கற்பிக்கப்படாமல் சீரழிக்கப்படுகின்றனர்.

99.9 வீதமான சிங்கள மக்களுக்கு தமிழ் தெரியாத இன்றைய நிலையில் 12.6 வீத இலங்கைத்தமிழ் மக்கள் 5வீத சிங்கள இனவெறியர்களின் இனவெறித் துண்டுதலால் ஒடுக்கப்படுகின்றனர். இது யுத்தத்தின் ஒரு கோர வடிவமாகும்.

1990 இல் இலங்கை அரசுத்துறை வேலையான 7 லட்சத்தில், இலங்கை தமிழ் பேசும் மக்கள் பெற்றது என்னவோ 50,400 வேலை மட்டுமே. அதாவது 12.6 வீதமான இலங்கைத் தமிழர், அரசு வேலைகளில் 7.2 வீதம் மட்டுமே பெற்றனர். இது 1980 களில் 11.25 வீதமாக இருந்து 1985 இல் 9.67 வீதமாகக் குறைந்து 1995 இல் 7.2 வீதமாக குறைந்து செல்கின்றது. இது தனிநபர் துறையில் மேலும் அதிகமாகும். இலங்கைத் தமிழர்களுக்கு இந்நிலை எனின் முஸ்லீம், மலையகமக்களின் நிலையை கற்பனை செய்யத் தேவையில்லை. இந்தவகையில் இனவாதம் மேலும் தீவிரப்படுத்தப்பட்ட யுத்தத்தை நோக்கி வேகமாக நகர்ந்து செல்வதை பின்வரும் அட்டவணையில் கானமுடியும். வேலைவாய்புகள் 1980 – 1985 – 1990 இப்புள்ளிவிபரத்தை இலங்கையின் இனரீதியான விதத்துடன் ஒப்பிட்டு பார்ப்பதே இனவாதத்தின் போக்கை இனங்காண முடியும். சிங்களவர் 73,9 வீதம், இலங்கைத் தமிழர்கள் 12,7 வீதம், இந்தியத் தமிழர்கள் 5,5 வீதம், முஸ்லீம்கள் 7,0 வீதம், ஏனையோர் 0,9 வீதமாகும். வேலைவாய்புக்கள் யுத்தத்தின் மூலம் குறைந்து செல்ல இனவாதத்தின் மூலம் சிங்களவர் வேலைவாய்பு அதிகரித்துச் செல்கிறது. இதை

# தமிழீழ – தமிழக மக்கள் உறவு வளரட்டும்

## உலகளவில் புலம்பெயர்ந்த தமிழீழ அகதிகளே!
## உலக மக்களுடன் ஒன்று படுவோம்! (எமக்கு கிடைத்த துண்டுப் பிரசுரம்)

இலங்கையில், ஸ்ரீலங்கா சிங்களப் பேரினவாத அரசும், வல்லரசியங்களும் தமிழீழ மக்கள் மீது தேசிய ஒடுக்கு முறையை, ஒடுக்கு முறை யுத்தத்தை நடாத்தி வருகின்றனர். 1948க்கு பிந்திய புதிய காலணிய வரலாற்றின் பெரும்பகுதி, சிங்களப் பௌத்த பெரினவாதத்தின் தமிழர் உரிமை பறிப்பு, இனக்கலவரம், பிரதேச ஆக்கிரமிப்பு, இனப்படுகொலை என இன ஒடுக்கு முறையும் அதற்கு எதிரான தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தாலும் எழுதப்பட்டுள்ளது. அன்று முதல் இன்று வரை ஸ்ரீலங்கா அரசின் கொலை வெறிக்கு தப்பிய தமிழீழ மக்கள் தாய் மண்ணிழந்து, உற்றார் உறவினரை இழந்து, பிரிந்து உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உயிர் பாதுகாப்பு என்பதற்காக உலகளவில் புலம்பெயர்ந்து வாழ்கின்றனர்.

1983க்கு முன் நடந்த இனக்கலவரம், இனப்படுகொலைகளில் அகதிகளான தமிழர்கள் ஸ்ரீலாங்காவிலிருந்து தமிழீழம் நோக்கி வந்தனர். ஆனால் 83 இல் நாடு தழுவியளவில் நடந்த கறுப்பு யூலை படுகொலை தமிழீழ மக்களை உலகின் மூலை முடுக்குகளுக்கு எல்லாம் தப்பியோடத் தூண்டியது. உலக மக்களும், நிராதரவான மக்களை கைநீட்டி வரவேற்றனர். தாய் மண்ணை விட்டு வெளியேறிய அகதிகள் 90 விதம் பேர், மொழி, இன உணர்வால் ஆர்ப்பரித்து நின்ற, மனிதாபிமான சனநாயகஎண்ணங்கலாள் ஆதரவுக்கரம் கொடுத்த அண்டை நாடான தமிழகத்துள் நுழைந்தனர், இவர்களிலும் 75 வீதம் மக்கள் சமூக ரீதியிலும், பொருளியல் ரீதியிலும் பின்தங்கியவர்களான விவசாயிகள், மீனவர்கள், தொழிலாளர்கள் அரசு ஊளியர்களாக இருந்தனர்.

அன்றைய நிலையில் தமிழீழ மக்களின் சுயநிர்ணய உணர்விற்கான போராட்டத்தை இந்திய மத்திய, மாநில அரசுகளும் ஆளும் வர்க்கங்களும் கூட தமது பிராந்திய, ஆட்சி அதிகார விஸ்தரிப்பு நோக்கங்களிலிருந்து ஆதரித்தனர். விடுதலை இயக்கங்களை நேரடியாகவும் மறைமுகமாகவும், தங்கும் இடம், பணம், ஆயுதம், போக்குவரத்து வசதி என எல்லா மட்டத்திலும் உதவியது. ஆனால் தமிழகத்தில் இருந்து அகதி முகாம்களிலும், இயக்கங்களின் அனைத்து நடவக்கைகளுக்கும் அரசின் எழுதப்படாத அனுமதி இருந்தது. அப்போது அகதிகளின் வெளிநடமாட்டத்துக்கு சுதந்திரம் இருந்தது. தமிழக மக்களின் உளப்பூர்வ ஆதரவு எழுச்சி நிலையிலிருந்ததால் அகதிகளின் அடிப்படைப் பிரச்சனைகள் உணவு, பணம், தங்குமிடம், மருத்துவம், கல்வி எல்லாம் குறிக்கப்பட்டளவுக்கு நிவர்த்திகக்கப்பட்டது.

அதேவேளை இயக்கங்களின் அங்கும் இங்கொன்றுமான சனநாயக விரோத, மக்களை மதிக்காத அராஜக நடவடிக்கைகள் அகதி முகாம்களில்

**11 பக்கம் பார்க்க**

---

அட்டவணையில் காணமுடியும். எல்லா சிறுபாண்மை தேசிய இனத்தின் மீதான ஒடுக்கு முறையை வேலைவாய்பிலும் இனங்காண முடியும். வரண்ட பிரதேசமான யாழ்குடாநாடு இனவெறியர்காளால் புறக்கனிக்கப்பட்டு, யுத்தக் கொடூரங்களால் மேலும் வரட்சியை நோக்கி நகர்கின்றது. 411 சதுரமைல் பரப்பைக் கொண்ட யாழ்குடாநாடு 34,0 சதுரமைல் ஆனையிறவு கடலேரியையும், 125 சதுரமைல் யாழ் கடலேரியையும் கொண்டுள்ளது.

யாழ் நன்நீர் ஊற்று என்பது மழையையும், அதன் தேக்கத்தில் உள்ள குளங்களையும் சார்ந்ததேயாகும். 25 வருடங்களுக்கு முன் 1060 சிறு குளங்களை யாழ் குடாநாடு கொண்டிருந்தது. இங்கு 6,600 கிணறுகளையும், 1800 தோட்டக் கிணறுகளையும் கொண்டிருந்ததுடன் தோட்டச் செய்கைக்கு 6000கனலீற்றர் நீரே ஆண்டுக்கு கிணற்றில் இருந்து இறைக்கப்பட்டது.

இன்று யுத்தம், மற்றும் குளங்களை புணரமைப்பதில் புறக்கணிப்பம் என்ற இனவாதம் யாழ் குடாநாட்டை பாலைவனமாக மாற்றிவருகின்றது. இது எதிர்காலத்தில் நன்நீர் பெறுவதே கேள்விக்கு உள்ளாகிவிடும்.

இப்படிப் பல புள்ளிவிபரங்களை நாம் தொடுக்க முடியும் இனவாதம் தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணயத்தை குழிதோண்டிப் புதைக்க எல்லாவகையிலும் எல்லாத் துறையிலும் காணப்படுவதை இக்கட்டுரை மூலம் காணமுடியும். தமிழ் பேசும் மக்கள் இதை எதிர்த்து முறியடிக்க சொந்த மக்களுக்கு போராட ஜனநாயகமும், சிங்கள முஸ்லீம் சாதாரண மக்களை அரவணைத்தும் செல்லும் வழியில் மட்டுமே இனவாதத்தை தோற்கடித்து தமிழ் தேசிய சுயநிர்ணயத்தை பெற முடிவதுடன் சொந்த சகோதர சிங்கள முஸ்லீம் மலையக ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கு வழிகாட்ட முடியும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

# சுமைகள்:~

இப்பத்திரிகை மூலம் சுமைகள் தனது 17 வது பத்திரிகையை வெளியிட்டுள்ளது. சுமைகள் ஆரம்பத்தில் சஞ்சிகை வடிவில் வெளிவந்து அதன்பின் பத்திரிகை வடிவில் வெளிவந்தது. ஆனால் இம்முறையும் நாம் பத்திரிகை வடிவிலேயே சுமைகளை வெளியிட முயற்சித்தோம் பயன் தரவில்லை. காரணம் வழமையாக ஐரோப்பிய சஞ்சிகைகள் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடி எம்மையும் விட்டுவிடவில்லை. சுமைகளை நிறுத்தும் அழவிற்கு பொருளாதார நெருக்கடி இருந்தது. ஆனால் நாம் இதையும் எதிர்த்து இம்முறை புத்தகவடிவில் நாம் சுமைகளைக் கொண்டு வந்துள்ளோம். இவ்வாறு புத்தகவடிவில் வெளிவரும் சுமைகள் தனது பணநெருக்கடியை சீர்செய்தபின் மீண்டும் பத்திரிகை வடிவில் வெளிவரும். இதற்கு அதிககாலம் இல்லை.

இவ்வாறு பணநெருக்கடியில் சுமைகள் மூழ்கியுள்ள அதேநேரம் இலங்கையில் பிரச்சனை அதிகமாகிய வண்ணமே உள்ளது. இராணுவம் யாழ்நகரைக் கைப்பற்றிய பிற்பாடு அகதிகளாக புலம் பெயர்ந்த மக்கள் யாழ் குடாநாட்டை தாண்டி வன்னிப்பிரதேசத்தினுள் தஞ்சம் புகுந்துள்ளனர். இவ்வாறு தஞ்சம் புகுந்த மக்கள் நாளாந்தம் பலவகையான இன்னல்களை அனுபவிக்கும் அதேவேளை தாம் கொழும்பு வரவும் பயந்த நிலையில் உள்ளனர். இவ்வாறு எமது சொந்த நாட்டிலேயே அகதிகளாக தமிழ் மக்கள் வாழ்கின்றனர். ஆனால் தனக்கு மூக்குப் போனாலும் எதிரிக்கு சகுனப்பிழை என்ற பழமொழிக்கேற்ப தமது பிற்போக்கு கருத்தைக்கொண்ட யுத்தம் தொடர்ந்தும் நடைபெறவேண்டும் என்று புலிகளும், அரசும் வைராக்கியமாக உள்ளது. இவ்வாறு இருதரப்பு யுத்தத்தாலும் மக்கள் பாதிக்கப்படுகின்றனர் என்ற கவலைகொண்ட நாடுகள் (ஆடுநனைகிறது என்று ஓநாய் அழுவதுபோல) பெச்சுவார்த்தைக்கான முயற்சியில் ஈடுபட்ட அரசையும் புலிகளையும் நிர்ப்பந்திக்கும் போது இருதரப்பினராலும் வோடிக்கையான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. அதைவது அரசு தரப்பால் வழமைபோல புலிகளை ஆயுதங்களைக் கிழே போட்பின் தான் பேச்சுவார்த்தை என்றும், புலிகள் தரப்பில் அரசினரால் கைப்பற்றப்பட்ட யாழ்நகரம் மீள தமது கையில் ஒப்படைக்கப்பட்ட பின்தான் பேச்சுவார்த்தை என்றும் கூறி பேச்சுவார்த்தையைத் தவிர்த்து யுத்தத்தை நடத்துகின்றனர். இவ்வாறு யுத்தம் நடப்பதால் தமிழ் அகதிகளாக வாழும் குழந்தைகளின் படிப்பும் அதிகளவு பாதிக்கப்பட்டுள்ளது.

இவற்றைவிட இராணுவத்தினரின் கையில் அகப்பட்ட பல தமிழர்களின் நிலை என்னவென்று தெரியாமல் உள்ளது. இவ்வாறு பலவழிகளிலும் பாதிக்கப்பட்டு வரும் தமிழ் மக்களின் விடிவிற்காக உண்மையாக உழைக்கும் பலர் தற்போது தீண்டப்படாதவர்களாகவும், துரோகிகளாகவும் ஒதுக்கப்பட்டநிலையில் உள்ளனர். இவ்வாறன மக்கள் மீது நேசம் கொண்டவர்களின் கையோங்கவேண்டின் அதற்கு அவர்களை ஒன்றிணைக்க ஓர் ஸ்தாபனம் அவசியம் அவ்வாறான ஸ்தாபணத்தை உருவாக்க வேண்டின் முற்போக்கு, புரட்சிகர சிந்தனை கொண்டவர்கள் முன்னின்று உழைக்கும் பட்சத்திலேயே சாத்தியமாகும். இதையே நாமும் வரவேற்கின்றோம்.

### 10 பக்கத் தொடர்ச்சி

இதற்கு ஜனநாயகம் வளங்கும் போது தான் அங்கு ஒடுக்க முறை முதலாளித்துவத்தில் என்பதை புரிந்து கொள்வர். இதைப் புரிந்து கொள்வது ஒரு பெண்ணின் இச் சமூகத்தின் முக்கியமான விடையமாகும். அப்பொழுது மட்டும் தான் அப்பெண் சரியான திசைவழியைக் கண்டு உணர முடியும். தேசிய சுயநிர்னய உரிமை ஒடுக்கப்பட்ட மக்களுக்கு வழங்கம் போதுதான் சொந்த முதலாளியை அம்மக்கள் இனங்காண்பர். உரிமையைப் பெற்றபின்தான் அவர்கள் புரிந்து கொள்வர் சொந்த முதலாளியின் கோடுரத்தை. இதைப் போன்று தான் பெண்கள் உரிமைகள் என்பது ஒரு பெண்ணின் விடுதலையை பெற்றுத்தரது. மாறாக இதை முதலாளித்துவ சுறண்டலைத் தகர்ப்பது தான் பெண்ணை விடுவிக்கும். அந்த வகையில் போராட முன்வருவதும், அணிதிரள்வது அவசியம்.


வங்கிக் கணக்கு இலக்கம்
8245 40 59545
Sparebanken Nor
தபால் கணக்கு இலக்கம்
0826 08 68293
வருடாந்தச் சந்தா 60குரோணர்
வெளிநாடு 10 US$

**Redaksjon:**
**Sumaihal redaksjonskommite med dyktig støtte av A.Mari, T.siva, Ulrik, Gjølstad og Sturle D. Tvedt.**
**Produksjon og distribusjon:**
**Sumaihal aktivistgrupp Norge.**


**Layout og Produksjonsansvarlig:**
Henrik Ormåsen.
**Postadresse:**
P.boks 415
9001 Tromsø

# உலகில் பெண்கள் நிலையும் பெண் அடக்குமுறை தொடர்பாகவும்

இன்று பெண்கள் ஜனநாயகமாக வாழ்வதாக ஒரு மாயை ஆனாதிக்க வாதிகளால் உருவாக்கப்பட்டது. பெரும்பாலும் எல்லா ஆன்களும் பெண் ஜனநாயகத்தை அனுபவிப்பதாக கூறும் அதேநேரம், அனேகமான பெண்கள் கூட இப்படி என்னுகின்றனர். இது ஆனாதிக்க கருத்தியல் கண்னோட்டத்தை பெண்களுக்கும் ஆண்களுக்கும் வழங்குவதன் மூலம் மதம், மொழி, கலாச்சாரம் போன்ற வடிவங்கள் ஊடாக புகுத்தப்பட்டு இயல்பாக ஏற்க நிற்பந்திக்கப்படுகிறது.

இதை நாம் விபரிப்பதாயின் ஏகாதிபத்தியம் மூன்றாம் உலகநாடுகள் மீது எப்படி அடக்கி ஒடுக்கியபடி அதை ஜனநாயகம் எனக் கூறியபடி, அதையே சொந்த மக்களையும், மூன்றாம் உலகமக்களையும் ஏற்க வைக்கப்பாடு படுகின்றதோ அதுபோன்றதே இதுவும்.

இதை மக்களை மூலச்சலவை செய்வதன் மூலம் பல்வேறு வடிவங்களில் உள்ள ஒடுக்கு முறைகளை ஒரு சாதாரண இயல்பான நிகழ்ச்சியாக மாற்றி விடுகின்றனர். இந்தவகையில் வானொலி, தொலைக்காட்சி, சினிமா, விளம்பரங்கள், பத்திரிகைகள், புத்தகங்கள், மதம், கலாச்சாரம் ............ என அனைத்தும்இதன் செயற்பாட்டுக்கு உழைக்கின்றது.



இந்தநிலையில் பெண்கள் மீதான ஒரு தனித்துவமான ஆண்களுக்கு இல்லாத ஒடுக்கு முறையை இனம் காட்டுவதே இக்கட்டுரையாகும். இக்கட்டுரையில் மூன்றாம் உலகநாடு இந்தியாவையும், முதலாம் உலகநாடு அமேரிக்காவை ஒட்டி பல புள்ளிவிபரங்களை தொகுக்க முனைகின்றேன்.

ஒரு பெண் விடுதலை அடையவேண்டும் எனின் அது தனித்து சாதித்து விட முடியாது. அப்பெண் சமுதாயத்தில் அங்கம் என்பதால் அப்பென் சமுதாய மாற்றத்துடன் தான் விடுதலை பெறமுடியும். இந்த வழகயில் பெண் போராட முற்படும் போது சமுதாயத்தில் காணப்படும் ஏற்றத் தாழ்வான வழ்நிலையில் பெண்களின் கோரிக்கைகள் மாறுபட செய்கிறது.

பெண் இந்த மாதிரி மறுக்கப்படும் அற்ப கோரிக்கை என்பது அப்பெண்ணை விடிவித்து விட மாட்டாது. மாறாக சமுதாயம் முழுவதுமாக ஒரு கலாச்சாரப் புரட்சியை நடத்தும் வகையில், பெண்கள் தமது கோரிக்கையை பல்வேறு சமூகக் கோரிக்கைகளுடன் இணைக்க வேண்டும்.

இந்தவகையில் பெண் போராட வேண்டும் எனில் ஆண்கள், பெண்கள் ஒரே நிலையை அடைவது மட்டும் இன்றி சமுதாயத்தில் உள்ள அனைத்து வேறுபாடுகளும் அகற்றப்படவேண்டும். இந்தவகையில் ஒரு போராட்டத்தைக் கட்டி எழுப்புவது என்பது ஒடுக்கப்பட்ட ஒரு பெண்ணின் கோரிக்கையாக, ஒரு சமுதாயக் கோரிக்கையாக இருக்க முடியும்.

இந்த வகையில் பெண் ஒடுக்கு முறையை நாம் புரிந்து கொள்ளும் வகையில் பல்வேறு புள்ளி விபரங்களை இவ்விடத்தில் தொகுக்க முனைகின்றேன். இக்கட்டுரையில் கற்பழிப்பு என்ற சொல்லை நான் பயன் படுத்துகின்றேன். இது பெண்களுக்கு கற்பு உண்டு என்ற அர்த்தம் அல்ல. மாறாக கற்பழிப்பு என்ற சொல்லக்கு மாற்றாக சரியான அதன் ஆணாதிக்க

பலாத்கார வன்மையை தெளிவு படுத்த ஒரு சொல்லை தமிழில் பெறுவது கடினமாக தற்போது உள்ளதால் மட்டுமே பயன்படுத்துகிறேன்.

உலகில் 52 வீதமாக உள்ள பெண்களில் 11 சாவீதம் பேரே அரசியலிலும், அரசாங்கத்திலும், முடிவெடுக்கும் அமைப்புக்களிலும் உள்ளனர். அத்துடன் உலக சனத்தொகையில் வருடம் கானாமல் போய் விடுகின்றனர். அமெரிக்கா அல்லாத மற்றைய நாடுகளில் நிர்வாக உயர்நிலையில் பெண்களின் பங்கு 1 சதவீதத்துக்கு குறைவானதேயாகும். இது அமெரிக்காவில் ஒரு சதவீதத்துக்கு சற்றுக் கூடுதலாகும். ஆண்களுக்கு சமமான நிலையை பெண்கள் அடைய 450 வருடங்கள் செல்லும் என்பது ஆணாதிக்க ஒடுக்கு முறையைப் புரிந்து கொள்ள உதவுகிறது.

உலகில் உள்ள ஒவ்வேரு 2000 பெண்களுக்கு ஒரு பெண் கற்பழிக்கப்படுகிறாள். வளரும் நாடுகளில் 3 பெண்களுக்கு ஒரு பெண் கணவன் மாரால் துன்புறுத்தப்படுகிறாள். உலகில் உள்ள மெத்த சனத்தொகை 560 கோடியாக உள்ள அதே நேரம் மிகவும் மோசமான வறுமைக்குள் 100 கோடிப் பேர் உள்ளனர். இதில் 70 கோடிப்பேர் பெண்களாவர். ஏகாதிபத்தியக் கொள்ளையில் ஏற்படும் வறுமையினை ஆனாதிக்கம் பின் பெண்கள் மீது திணிக்கின்றது. இதன் முலம் பெண்கள் இரட்டைச் சுமைக்கள் உள்ளாக்கப்படுகின்றனர்.

100 கோடிப் பேர் எழுதப்படிக்கத் தெரியாத அதேநேரம் இதில் 50 கோடி சிறுவர் சிறுமியராவர். இதில் பெண்கள் தேகை 75 கோடியாகும். குழந்தைகளில் 3இல் 2 பகுதி பெணகளாவர்.

ஒவ்வேரு 1000 குழந்தை பிறப்பில் ஆபிரிக்காவில் 175 பேர் இறக்க இந்தியாவில் 100 பேர் இறக்க முன்னேறிய நாடுகளில் 15 பேராக உள்ளது. இதில் பெண்கள் ஒவ்வெரு நாட்டுக்கும் இடையில் குழந்தை பெற்றெடுப்பதில் பாரிய வேறுபாட்டை கொண்டுள்ளன. இந்தவகையில் பின்தங்கிய நாட்டுப் பெண்கள் குழந்தை பேறுகளில் பாரிய சுமையைச் சுமக்கினறனர்.

30 போடிப்பேரைக் கொண்ட ஒரு பகுதிப் பெண் தொழிலாளர் அரைகுறை வேலையில் மிக மோசமாக கசக்கிப் பிழியப்படுகின்றனர். இந்தியாவை நாம் எடுப்பின் சராசரி ஒரு மணிநேரத்துக்கு ஒரு வரதட்சனைக் கொலை நிகழ்கிறது. இது வருடம் கிட்டத்தட்ட 9000 கொலையாக உள்ளது. 1989 முதல் 1991 வரையில் 18000 பெண்கள் வரதட்சனைக்காக தீக்கிரையாக்கப் பட்டுள்ளனர். மாமியார், கணவனின் சித்திர வதைக்குள்ளாகி 20000 பேர் தற்கொலை செய்தனர். தீயாக்கப்பட்டதுடன் கூடிய 13 பிரேதம் நாளோன்றுக்கு பிரேதப் பரிசோதனைக்கு அகமதாபாத்தின் பிரேத சாலைக்கு வருகின்றது. வரதட்சனைக் கொடுமையால் இறந்ததை சமாளிக்க பொலிசுக்கு 20000 ரூபாவும், நீதிபதிக்கு 25000 ரூபாவும் பொடுத்து தப்பித்து வருகினறனர்.

டெல்லியில் வரதட்சனைப் படுகொலைகள் அதிகரித்து வருகின்றது. இது 1985 இல் 43ஆகவும் 1988இல் 71 ஆகவும், 1989 தை, மாசியில் மட்டும் 132 என அதிகரித்து வந்துள்ளது. இது குஜராத் மானிலத்தில் நாளுக்கு 13 ஆகவுளளது.

1987 முதல் 1993 வரை இந்தியாவில் ஒரிசா மானிலத்தில் வழக்கு விசாரனைக்கு வந்த 1688 கற்பழிப்பு வழக்குகளில் 27 பேர் மட்டுமே தண்டிக்கப்பட்டனர். இது போன்று விசாரணக்கு பம்பாய் மாநிலத்தில் வந்த 68 வழக்குகளில் 14 பேர் மட்டுமே தண்டிக்கப்பட்டனர். இந்தவகையில் கற்பழிப்பு வழக்குகளில் பெண்களை விபச்சாரழகள் என நிறுவுவதும், இவர்களை அவமானப் படுத்துவதன் மூலம் ஆணாதிக்க நீதிமன்றம் செயற்பட்டு வந்தன. இது போன்று பல கற்பழிப்புகள் வெளியில் வராமல் இருப்பதுடன், பொலீஸ் வழக்கை பதிவு செய்ய மறுப்பதும், மருத்துவர்கள் கற்பழிப்பை உறுதிசெய்ய மறுப்பதும், பொலீசே கற்பழிப்பதும் சர்வசாதாரணமான ஒரு இயல்பான விடையமாக மாறிவிடுகின்றது. இந்தியாவில் வருடம் 20000 கற்பழிப்பு வழக்குகள் வருவதுடன் அதில் 100 பேர் தண்டிக்கப்படுவதே அபூர்வம் என்ற நிலைக்கு இன்று ஆணாதிக்க ஆட்சி நடக்கிறது.

இன்று பெண்களை இழிநிலையாகக் கருதுவதுடன் பெண் என்றால் கருவில் அழிப்பதும், பிறந்தபின் கொலை செய்துவிடுவதும் என்ற நிலை வேகமாகப்பரவிச் செல்கின்றது. உதாரணமாக சேலம் மாவட்டத்தில் 1250 குடும்பத்தை எடுத்து ஆய்வு செய்த போது 750 குடும்பத்துக்கு பெண் குழந்தைகள் மட்டுமே உயிர்வாழ்கின்றது என்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

பெண்மீது வரதட்சனை, கற்பு, அடிமை நிலை என்ற பல்வேறு காரணத்தை உள்ளடக்கி ஆணாதிக்க சமூகம் பெண்ணை இழிநிலைக்கு இட்டுச் சென்று பெண்ணை உயிருடன் கொல்கின்றனர். இந்திய கிராமப் புறத்தில் 43 வீதமான சிறுவர்களும், 69 வீதமான சிறுமிகளும் வறுமை காரணமாக பாடசாலை செல்லதில்லை. மற்றும் படிக்கும் மாணவர்களில் 5 பேருக்கு ஒருவர் பாடசாலைப் படிப்புக்களை முடிக்காது இடையில் கைவிடுகின்றனர். அத்துடன் பாடசாலை செல்லும் மாணவர்கள் 8 வீதம் பேருக்கு பள்ளிக்கூடமோ, கரும்பலகையோ, மேசைகளோ இல்லை. என்பதில் இருந்து பெண்களில் கல்வி எப்படிப் புறக்கணிக்கப்படுகின்றது என்பதை இதன் மூலம் காணமுடியும்.

இன்று பெண்கள் அனுபவிக்கும் ஆணாதிக்க சமூகத்தின் மற்றும் ஒரு புள்ளி விபரத்தைப்பார்ப்பின் அதிர்ச்சி அழிக்கும். இந்தியாவில் 12

பாடசாலையைச் சேர்ந்த 348 மாணவிகளை ஒள்ளடக்கிய ஆய்வு ஒன்று சம்வதா அமைப்பு நடத்தியது. ஒவ்வெரு 20 பெண்களில் 3 டிபர் கற்பழிக்கப்பட்டும், பல்வெறு சித்திர வதைக்கு உள்ளாகியிருந்ததையும் இதில் மூன்றில் ஒரு பங்கினர் 10 வயதிற்குக் கீழேயும், இச்சம்பவம் நடந்தள்ளது. 10 பேர்கழில் 5 பேருக்கு குழந்தையாக இருந்தபோதும், பலாத்காரப்படுத்த முற்படுபவர்கள் 10 பேரில் 8 பேர் சிறுவயதிலேயே மார்பகங்களை கசக்குவது போன்ற பல பலாத்கார நிந்தனைகளை சந்தித்தனர் என்பது தெரிய வந்தது. இதில் வேடிக்கை என்னவெனில் இச்செயற்பாடுகளில் ஈடுபட்ட 50 வீதமான ஆண்கள் அக்குழந்தைகளின் அப்பாக்கள், மாமாக்கள், சகோதரர்கள், மற்றும் நெருக்கிய உறவினர்களாவர்.

பெண் குழந்தைகளை தலைகுனிய வைத்து வீட்டுக்குள் பூட்டி வைத்த படியே இந்தியாக் கலாச்சாரம் பெண்களை பலாத்காரம் செய்கின்றது. பின் இவர்களே ஆணாதிக்கக் கற்பைக் கோருவதும் வேடிக்கையாக உள்ளது. குழந்தை என்று எந்த சிறுமியையும் விட்டுவைக்காத இவ்வாணாதிக்க சமூகம், அதன் கலாச்சார ஒழுக்கம் தேவைதானா என்பதை நாம் ஒவ்வெருவரம் கேட்க வேண்டும்.

இங்கு இதைச் செய்வதில் மதம் தீவிரமான பங்கு வகிக்கின்றது. இந்து மதம் பெண்ணை நிர்வானமாக சிலைகள் வடித்தது முதல் பெண்ணை கோவிலுக்கு விடமறுப்பதும், பெண்ணை பூசை செய்ய விட மறுப்பதும், பெண்ணை தாழ்த்தப்பட்ட சாதியின் நிலைக்கு உயர்சாதி சுட்டிக்காட்டும் இந்து தத்துவம் தான் இதன் எல்லாவற்றிற்கும் கோளாறு ஆகும். பெண்களை இரண்டாவது நிலைக்கு இட்டுச் சென்று தாழ் நிலைக்கு அடையாளப்பகுரியும் இந்து, முஸ்லீம், புத்த, கிறிஸ்தவம், …….. என அனைத்து சமயமும் தமது அடிப்படைக் கோட்பாட்டில் நிலைநிறுத்தி உள்ளன.

மூன்றாம் உலக நாடான இந்தியாவைப் பார்ப்பது போல் அமெரிக்காவை எடுப்பின் 7 அமெரிக்காப் பெண்களுக்கு ஒருவர் ஏழையாகவும், 6 பெண்களுக்கு ஒருவர் மருத்துவ வசதி இன்றியும் உள்ளனர். இதில் கறுப்பு நிறப் பெண்கள் 25 சதவீதம் பேர் வறுமைக்குள் உள்ளனர். நிறவேறியும் சேர்ந்து கறுப்புப் பெண்களை ஒடுக்குகின்றது. இங்கு கறுப்பு நிறப் பெண் வறுமை, ஆணாதிக்கம், நிறம் போன்ற மூன்று சுமையை ஒரேநேரத்தில் சந்திக்கின்றாள்.

1989 இல் அமெரிக்காவில் ஆண் உழைப்பாயின் வருமானத்தில், ஒரே வேலையைச் செய்யும் வெள்ளையினப் பெண் 62 வீதத்தையும், கறுப்பு இனப் பெண் 56 வீதத்தையும் மட்டுமே பெற்று தனது இரண்டாவது நிலையை ஆணாதிக்க ஜனநாயக சமுதாயத்தில் பெறுகிறாள்.

அமெரிக்காவில் பெண்கள் வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்ட நிலமை என்பது 1986—89 க்கு இடையில் 9 வீதம் கூலிய பணவீக்கத்துடன் குறைத்தும், மற்ம் ஓய்வூதியக் குறைவும் 13.8 வீதமாக மாறியதால் தான். இதனால் 1980இல் 54 வீதம் மாணவப் பெண்கள் உழைப்பில் ஈடுபடல் 1990 65 வீதமாக மாறியதன் மூலம் தனது குடும்ப உழைபுவருமானத்தைப் பங்கிட்டு சரிக்கட்ட முயல்கின்றனர்.

இதேநேரம் அமெரிக்காவில் நிரந்தர வேலை செய்யும் 1கொடி பெண்கள் தமது அடிப்படைத் தேவையைக் கூட பூர்த்தி செய்ய முடியாத வறுமைக்குள்ளான சம்பளத்தைப் பெறுகின்றனர். 1980—88 க்கு இடைப்பட்ட காலத்தில் அமெரிக்காவில் 3 லட்சம் சிறுபண்ணைகளை விழுங்கிய பெரிய பண்ணைகள் கிராமப் புற வறுமையை 44.8 வீதமாக அதிகரிக்க வைத்ததன் மூலம் கிராமப்புறப் பெண்களின் அரைவாசிப் பேர் வறுமைக்குள் வாடுகின்றனர். ஒரு பண்ணை மூடியபோது 3 முதல் 5பேர் வேலை இழந்தனர்.

1988 இல் அமெரிக்காவில் மகற்பேறு மருத்துவர் 100,000 பேருக்கு 61.4 பேர் நகரப் புறத்திற்கு இருந்தனர். இது கிராமப் புறத்திற்கு 24.5 ஆக இருந்தது. இந்த வகையில் கிராமப் புறப்பெண்கள் மிக மோசமாக ஒடுக்கபட்ட அதே நேரம் நகர்புறப் பெண்கள் போதிய மருந்தின்றி அவதிப்பட்டனர்.

அமேரிக்காவில் உள்ள முதியோரில் 58 வீதம் பெண்களாவர். 65 வயதிற்கு மேற்பட்ட முதியோரில் 71 சதவீத பெண்கள் ஏழைகளாவர். வீடின்றி அவதிப்படும் மக்கள் 30 முதல் 40 லட்சமாக உள்ள அதே நேரம் அதில் பெரும்பாலானோர் பெண்களாவர். வீடு வசதியற்ற பெண்கள் 30 வீதமானோருக்க மகற் பேறு காலக் கணிப்பு ஏதுமின்றி உள்ளனர். 1000 க்கு 17 குழந்தை இறப்பு உள்ள அமெரிக்காவில் வீடற்ற குழந்தைகள் இறப்பு 25 ஆக உள்ளது.

1987 இல் அமெரிக்காவில் குழந்தை இறப்பு 1000 இற்கு 17 என்ற சிலையில் வெள்ளைக் குழந்தை இறப்பு 8.6 ஆகவும், கறுப்புக் குழந்தை இறப்பு 17.9 ஆகவும் காணப்பட்டது. இதைவிட அமெரிக்காவில் எந்த நேரமும் 1 லட்சம் குழந்தைகள் வீதியில் வசித்த வண்ணம் உள்ளன.

1990 இல் அமெரிக்காவில் கற்பழிப்பு 4 மடங்கு அதிகரித்ததுடன் 5 ஒரு பெண் கற்பழிக்கப்படுகின்றாள். வருடம் 30 முதல் 40 லட்சம் பெண்கள் அடித்து துன்புறுத்தப்படுவதுடன் இதில் 10 லட்சம் பெண்கள் மருத்துவத் தேவைக்கு மருத்துவ மனைக்குச் செல்கிறாள். இந்த வகையில் 1000க்கு 23.5 வீதமாக வெள்ளியினப் பெண்

அனுபவித்த இந்த சித்திர வதையை கறுப்பு இனப்பெண் 35.3 ஆக உள்ளது.

1990 இல் அமெலிக்காவில் 1.8 முதல் 2 கோடிப்போர் வருடம் முழுக்கப் பட்டினியாக உள்ளனர். இதில் 18 வயதிற்கு குறைந்த குழந்தைகள் 70 முதல் 80 லட்சமாகவும், 65 வயதிற்கு மேற்பட்டோர் 20 லட்சம் பேராகவும் உள்ளனர். இதில் பெரும்பாலானோர் பெண்களாவர்.

அமெரிக்க அரசின் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மக்கள் தொகை 3,2 கோடிப் பேராவர். இதில் பெரும்பகுதி பெண்களாவர். இந்த வறுமைக்கோட்டின் நிலவரம் 1980–88 க்க இடையில் 43 வீதமாக அதிகரித்தது. 1985 இல் சராசரி வருடத்திற்கு 3 லட்சம் ரூபா வருமானமுடைய தாய்மார் 68 வீதம் வீட்டுக்கு வெளியிலும் வேலை செய்தனர். இதன் மூலம் தமது வறுமையைத் தவிர்க்க முனைந்தனர்.

இந்த வகையில் அமெரிக்காவிற்கம் இந்தியாவிற்கும் இடையில் வறுமையும் பெண் ஒடுக்கு முறையும் அதிக வேறுபாடின்றி பொதுவான ஒன்றாக உள்ளது. எண்ணிக்கையில் மட்டுமே இங்கு வேறுபாடு இருப்பதை நாம் அவதானிக்க முடியும். நாமுஇ வேறுசில நாடுகளை எடுத்துப் பார்ப்பின் 1988 இல் சீனாவில் ஒரு குழந்தை ஒரு குடும்பத்திற்கு என டெங்சியாபிங் அறித்தபின் அங்கு பெண் சிசுக் கொலை வேகமாக அதிகரித்துச் சென்றது. இது வருடத்திற்கு 10 லட்சமாக மாறியது. டெங் கம்யூனிசத்தைக் கைவிட்டு முதலாளித்துவத்தை ஏற்றபின்பு சமூகத்தில் பெண்கள் 2ஆவது பிரஜையாக மாறியதுடன் பெண்களை இழிநிலைக்கு ஈட்டுச்சென்றனர்.

இன்று அங்கு பெண்கள் பகிரங்க இடத்தில் ஏலம் விடுவதுடன், பெண்களை விலை பேசி விற்கப்படுவதும், ஒரு பெண்ணை 4,5 பேர் கூட்டாக வாங்கி அடிமைகளாக தமது விடுகளில் விடுகின்றனர். பெண்களை வரிசையாக நிறுத்தி அவளின் மார்பகத்தின் மீது ஒரு துண்டில் பெயர், வயது, விலை விற்பதற்காக நிறுத்தி வைக்கப்படுவது இன்று நடமுறையாக உள்ளது. 25 வீதமான பெண்கள் வீட்டில் துன்புறுத்தலை கணவன்மார் மூலம் எதிர் கொள்கின்றனர். 15 கொடிப் பெண்களாகும். இன்று டெங் பொருளாதார சீர்திருத்தம் 2 கோடிப் பெண்களை வேலையை விட்டு நீக்கி வீட்டில் அடிமையாக இருக்க வீட்டுக்கு அனுப்பியுள்ளது. பாகிஸ்தான் சிறையில் உள்ள 70 வீதமான பெண் கைதிகளை பொலிசார் பாலியலில் பல்வெறு வன்முறைக்கு உள்ளாகு கின்றனர். 90 வீதமான பெண்களுக்க தாம் எந்தச் சட்டத்தின் கீழ் அடைத்து வைத்திருக்கின்றோம் எனத் தெரியாது. 50 முதல் 80 வீதமான பெண்கள் "ஹ்தூக்" கீழ் அடைக்கப்பட்டு உள்ளனர். இச்சட்டம் பெண்ணை சந்தேகத்துக்குரிய கூட்டம் மட்டுமே குற்றவாழியாக்கின்றது. அதேநேரம் ஆண்களுக்கு இச்சட்டம் நாலுசாட்சிகள் குற்றவாழி என நிறுவ வேண்டும்.

கொன்யா நாட்டில் பெண் குழந்தைகள் பிறந்தவுடன் அப்பெண் குழந்தையின் பெண்ணுறுப்பில் உள்ள உணர்ச்சிப் பகுதியை வெட்டி எறியப்பட்ட பின் பெண்ணுறுப்பை தைத்து விடுவார்கள். அப்பெண் திருமணம் ஆனபின்பே அத்தையலை அறுத்து ஆணாதிக்க கற்பை உறுதி செய்கின்றனர். இதற்கும் எம்நாட்டில் இருப்பதற்கும் அதிக வேறுபாடில்லை.



தாய்லாந்தில் 10 லட்சம் சிறுமிகள் விபச்சாரத்தில் ஈடுபடுவதன் மூலம் அச்சிறுமிகளை சிறுவயதிலேயே எயிட்சுக்கு உள்ளாக்கி சீமைப்பன்றிகள் கொண்றொழிக்கின்றன. இலங்கையில் உல்லாசப் பயனத்துறையில் சிறுமிகளை பயன்படுத்துவதுடன் வெள்ளை சீமான்களின் பாலியல் தேவைக்கு 40 சிறுவர் சிறுமியர்கள் பலியாக்கப்பட்டு உள்ளனர். இதைவிட 90–94 இடையில் 4 ஆயிரம் பெண் சிசுக்கள் கருவில் அழிக்கப்பட்டு உள்ளது. இன்று உள்ள பெண் வீதம் 93.5 மேலும் குறைந்து செல்ல புள்ளி விபரங்கள் ஊக்குவிக்கின்றன.

ஐரோப்பாவில் 10 முதல் 15 வதமான சிறுவர்கள் ஆனாதைகளாக உள்ள அதே நேரம் சிறுமிகள் பாலியல் வதைக்க உள்ளாகின்றனர். அண்மையில் பிராஸ் நாட்டின் புள்ளி விபரம் ஒன்றில் 15 வயதிற்கு மேற்பட்ட பெண்களில் 16 சதவீதத்தினர் தாம் ஏதோ ஒரு வகையில் பாலியல் பலாத்காரத்திற்கு உட்பட்டது தொரியவந்தது. பிரான்சில் ஆணுபக்கும், பெண்ணுக்கும் இடையில் பாரிய சம்பள வேறுபாட்டை ஒரே தொழிலில் கொண்டுள்ளனர்.

இந்தவகையில் உள்ள அதேநோரம் விவாகரத்துக்கள் பிரான்ஸில் 19809 இல் 79600, 1986 இல் 1,06,700, 1989 இல் 1,03,600, 1993 இல் 1,09,200 என அதிகரித்துள்ளது. மக்கள் குடும்பமாக வாழ்தல் என்பது பின்வரம் அட்டவனையை ஒட்டி ஆராய்வோம்.

இந்த வகையில் இன்று

| வருடவருமானம் | பெண் | ஆண் | அதிகரிப்பு |
|---|---|---|---|
| பாதுகாப்புத் துறை | 1,96,200 பிறாங் | 2,69,000 பிறாங் | 37 வீதம் |
| தொ. நுட்பவியல் | 1,15,800 பிறாங் | 1,37,000 பிறாங் | 18 வீதம் |
| அலுவலகர் | 86,800 பிறாங் | 96,600 பிறாங் | 11 வீதம் |
| தொழிலாளர் | 72,100 பிறாங் | 93,600 பிறாங் | 29 வீதம் |

குடும்பமாக வாழ்தல் என்பது சராசரி 12வீதமாக மட்டுமே உள்ளது இந்த வகையில் பிராஸ் சமூகம் தனித்து வாழ்கின்ற வகையில் 88 வீதம் பேர் இன்று உள்ளனர். இந்த நேரம் தன்னினச் சேர்க்கையை ஏற்றுக் கோள்ளப் 1973 இல் 19 வீதமாக இருந்து 1995 இல் 41 வீதமாக மாறியுள்ளதுடன் இவ்வருடம் தன்னினச் சேர்க்கையாளருக்கு குடும்பமாக அங்கீகரித்து குடும்ப அத்தாட்சிப்பத்திரத்தை அரசு வழங்கி உளள்ளது.

இந்த நுற்றாண்டின் ஆரம்பத்தில் விவாகத்தக்கு உரிமையை வழங்குவதில் எல்லாத் தரப்பிலும் எதிர்ப்பு எழுந்தது. இதேநேரம் பெண்கள் இந்த உரிமையை அடைவதன் மூலம் பெண் சுதந்திரமாக விடுதலை அடைந்து விடுவாள் எனவும் பிரகடனம் செய்தனர்.

இன்று உதாரணமாக பிரான்ஸ் சமூகப் புள்ளி விபரப்படி லட்சங்களைத் தான்டும் விவாகரத்துக்கள், மற்றும் தனித்து வாழும் மக்கள் என்று இருந்த போது பெண்விடுதலை அடையவில்லை. இருக்கும் பிற்போக்கு குடும்ப அலகு சிதைந்த போதும் பெண் நவீன வடிவத்தில் தொடர்ந்தும் சரண்டபபட்டாள்.

ஐரோப்பாவில் சமூகக் கலாச்சாரம், தனிமனித சிந்தனைகள் உடன் ஏகாதிபத்தியம் தன்னை மேலும் மையப்படுத்தப்பட்ட தனிமனித சுரண்டலை தீவிரமாக்கி வருகின்றது. இந்த வகையில் இன்று உலகில் எள்ள சிறு உற்பத்திகளைத் தகர்த்தும், தேசிய உற்பத்தியை தகர்த்தும், மிகப்பெரும் சில பன்கூட்டு கம்பனிகளை உலகை ஆளும் நிலைக்குள் வேகமாகச் செல்கிறது.

இந்தவகையில் 1985 இல் 3500 கோடி வருமானம் உள்ள 400 பன்கூட்டு நிறுவனங்கள் உலகப் பொருளாதாரத்தில் 90 வீதம் கட்டுப்படித்தின. இந்தவகையில் உள்ள உலகப் பன்கூட்டு நிறுவனங்களில் வருமானத்தை விட கூடுதலான வருமானத்தைக் கொண்ட நாடுகள் 9 மட்டுமே இருந்தன. மற்றும்உலகில் மிகப்பெரிய 20 வஙஇகிகள் ஒன்றினைந்து மட்டும் 7,24,500 கோடி ரூபாயாகும்.

இந்த வகையில் உலகப் பொருளாதாரத்தையும், உலகையும் ஒரு குடையின் கீழ் ஆளும் வகையில் பொருளாதார மையங்கள் உருவாக்கப்படும் வேகம் பெருகுகிறது. மக்கள் எல்லோரையும் உலக்கும் தொழிலாளர் படைக்குள் தாங்கிச் செல்லும் செயலானது தன்னுடன் ஒரு கலாச்சார வடிவத்தை இதற்க இசைவாக நகர்த்துகிறது.

மக்களஇ கூட்டு உழைப்ப, பின் தனியார் உழைப்பாக மாறி பின் அதையும் இழந்து செல்லும் இப்பொக்கின் ஊடாக கூட்டுக் குடும்பங்கள் சிதைந்து , குடும்பம் என்ற அலகு சிதைந்து மனிதனை தனிநபராக மாற்றியுள்ளது.

ஒருவரை ஒருவர் அருகில் இருந்தும் பழக முடியாத வகையில் பணம் என்ற எல்லைக்கள் மனிதனைக் குறுக்கி இயந்திர மனிதனாக மாற்றியுள்ள இந்தச் சமுதாயத்தில் குடும்பம் எந்த எந்த பாசத்தையும் விலைபேசி விற்றுள்ளது. இதை இன்று புதிதானக உருவாகிவரும் வலைப்பின்னல் வியாபாரமுறை இருக்கும் குடும்ப அலகுக்குள் கூட வியாபாரத்தை உக்கிவிக்கின்றது.

இந்த வகையில் குடம்ப அலகு சிதைந்த போக்கு பெர்களுக்கு விடுதலையைப் பெற்றத் தரவில்லை. மாறாக மேலும் நவீன வகையில் பெண்கள் சுரண்டப்பட்டனர். இந்த முதலாளித்துவ சமுதாயத்தில் விவாகரத்து உரிமைகள், மற்றம் பெண் பொருளாதார பலம்என எந்த உரிமையும் பெண்களை விடுவித்துவிடவில்லை. இதை பிரஞ்சுப் புள்ளி விபரங்கள் தெரிவிகின்றன.

பெண்கள் சரி அல்லது மக்களின் எந்த பிரபுவும் சரி உரிமை என்பது அவர்களை விடுவிக்காது. உரிமை என்பது ஒரு ஜனநாயக கோரிக்கையாக இருந்தாலும் அது இவர்களை விடுவிக்காது. ஏன்னெனில் பெண்கள் கோரிய பெண்கள் வாக்குரிமை, விவாகரத்துரிமை, வேலைசெய்யும் உரிமை, கருத்தடை உரிமை, கரு அழிப்புரிமை, ......... ......... என அனைத்துரிமையும் அவர்களை விடுவித்து விடவில்லை. இது மறுக்கப்படும் போது ஏதோ இருப்பதால் தான் பெண்கள் ஒடுக்கப்பட்டனர் என ஒரு பிரமையை ஏற்படுத்த முனைவர்.

5 பக்கம் பார்க்க ☞

4ம் பக்கத் தொடர்

தொடங்கியது. இவற்றை அகதிகள் தம்மால் முடிந்த வளிகளில் எதிர்த்தனர். தமிழக அதிகாரிகளிடம் முறையிட்டனர். ஆனால் அன்று அரசியல் வாதிகள், அதிகாரிகள், அரசு இயக்கங்களைப் பயன்படுத்தும் தேவை பிரதானமாக இருந்ததால் அகதிகளின் சட்டத்திற்கு உட்பட்ட நியாயமான கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டது, உதாசீனம் செய்யப்பட்டது. சில முகாம்களில் நியாய உணர்வுள்ள சில அகதிகள் பொலீஸ்– இயக்கத்தவர்களின் கூட்டு நெருக்குதலுக்கு, அச்சுறுத்தலுக்கு கூட உள்ளாக்கப்பட்டனர். (ஆர்ப்பாட்டமான ஆரவாரத்தில் அன்றும் அகதிகளுக்கு எதிரான அநியாயங்கள் அமுக்கப்பட்டது.) அகதி முகாமிற்குள் அத்துமீறிய ஆள்கடத்தலுக்கும், போதைவஸ்த்துக் கடத்தலுக்கும் எதிராகக் குரல் கொடுத்த அகதிகள் சிலர் நடுக்கடலுக்கு கொண்டு செல்லப்பட்டு சுட்டுக் கொண்று வீசப்பட்டனர்.

தமிழீழ அகதிகளது வரலாற்றில் 1987 களின் பின் புதிய நிலையும் உருவானது. இந்திய மத்திய, மாநில அரசுகள் தமிழீழ விடுதலை இயக்கங்களை ஆதரிக்கும் கொள்கையில் ஏற்படுத்திக் கொண்ட மாற்றமும், விடுதலை இயக்கங்களின் தலைமை அதிகாரப் போட்டி, இயக்க மோதல்களால் போராட்டக்களத்தின் உள்ளேயே ஏற்பட்ட மாறுதல்களும் மேலும் மேலும் தமிழீழ மக்களும், இயக்கங்களின் கீழ்மட்டப் போராளிகளும் கூட தாய்மண்ணிலிருந்து துரத்தப்பட்டனர்கள். மீண்டும் உலகளவில் புலம் பெயர்ந்த அகதிகளின் பலத்தை மதப்பிரிவு அதிகப்படுத்தியது. வடக்கின் பூர்வீக மக்களான தமிழ் தேசிய இனத்தின் முஸ்லீம் மதப்பிரிவு மக்கள் புலிகளால் விரட்டியடிக்கப்பட்டு கிழக்கிலும், ஸ்ரீலங்காவிலும் அகதிகளாக்கப்பட்டனர். இந்திய சமாதானப்படைக்கு?எதிரான தமிழீழ மக்களும், விடுதலைப் புலிகள் நடத்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்புப் போராட்டம், தமிழக, இந்திய மக்களின் ஆதரவு, உலக மக்களின் ஆதரவு என்பன. அதுவரையில் தமிழக அகதிகள் விவகாரத்தில் கொள்கையின்றி இருந்த நிலையில் தமிழீழ அகதிகளுக்கு அகதி அந்தஸ்து கொடுக்கக் கூடாது முழு அகதிகளையும் அரசின் முழுக்கட்டுப்பாட்டுக்குள் (எந்த நிர்ப்பந்தம், எதிர்ப்புப் பிரச்சாரம் நடத்தியும்) வைப்பது, நிர்ப்பந்தங்கள் மூலம் நாட்டை விட்டு வெளியேற்றுவது என்ற கொள்கைகளை வகுக்கத் தூண்டியது. ரஜீவ் காந்தி கொலை பத்மநாபா கொலை அரசின் திட்டங்களுக்கு மத்தாப்பாய் விளங்கியது. அரசு படைகளில் இருப்பது போல் சாதாரண படை அதிரடிப்படை, பயங்கரவாத எதிர்ப்புப் படை ............ போல் தமிழீழ அகதிகளை விதம் விதமாகப் பிரித்தனர். சாதாரண முகாம், திறந்தவெளிமுகாம், சிறப்பு முகாம், புலிகளது சிறப்பு முகாம், புனைகளுக்கு சிறப்பு முகாம், ............... என அமைக்கப்பட்டு அகதிகள் கணவன்–மனைவி, தாய்–பிள்ளை பேதமின்றி பிரித்தனர். .

முகாம்களுக்கு வெளியே இருந்து முறையாக காவல் நிலையங்களில் தங்கள் பெயரைப் பதிவு செய்யாத, கடவுச்சீட்டு இல்லாத, இலங்கைக் குடிமக்களே வெளிநாட்டவர் பதிவுச் சட்டத்தின் கீழ் (அகதிகளாக அல்ல) கைது செய்யப்பட்டு சிறப்பு முகாம்களில் வைக்கப்படுகிறார்கள். அவர்கள் தங்கள் சொந்த நாட்டிக்கு சொந்தச் செலவில் போக விரும்பினால் அவர்கள் மீது வழக்குப் பதிவு இல்லாவிடில் அவர்கள் நாட்டிற்கு அனுப்பி வைக்கப்படுவார்கள். பாதுகாப்பு இணை அமைச்சரின் கடிதம் நமக்கு தெழிவாகப் புரிய வைக்கிறதல்லவா? .

தமிழீழ அகதிகள் தினசரி வாழ்வில் எல்லாவகை நிர்ப்பந்தங்களையும் கொடுத்து வெளியேற்றுவது தாமாகவே வெளியேறுகிறோம் என எழுதிக்கொடுப்பதற்கு நிர்ப்பந்தங்களை நேரடியாக, மறைமுகமாக கொடுக்கத் தொடங்கியது. அரசு அகதிகளின் இருப்பிடம், உணவு, நடமாட்டச் சுதந்திரம், சுகாதாரம் கல்வி இவற்றில் கட்டுப்பாடுகள் அதிகரித்தது, தமிழக மக்களின் சனநாயக, மனிதாபிமான ஆதரவு உணர்வு என எல்லாவற்றிற்கும் வெட்டும் வேட்டும் வைக்கப்பட்டது. இவை வேகமாக அமுல்படுத்தப்பட்டது. சென்னை, திருச்சி, பெங்களூர், பம்பாய் போன்ற பெரிய நகரங்களில், பெரிய பங்களாக்களில் இருக்கின்ற தமிழீழத்தைச் சேர்ந்த சிலர் போதைவஸ்து கடத்தல், ஆள்கடத்தல், தலைமாற்றல் மற்றும் சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடுகிறார்கள்.

இவர்களது சமூகவிரோத நடவடிக்கைகளைக் காட்டி லட்சக்கணக்கான அப்பாவி அகதிகளையும், போராளிகளையும் கொச்சைப்படுத்தும் தமிழக, இந்திய மக்களுக்கு அகதிகள் மேல் வெறுப்புணர்வை ஏற்படுத்தும் பிரச்சதரத்தை முடுக்கிவிட்டுள்ளது. மறுபுறம் இந்த சமூகவிரோதக் கும்பலிடம் மாதாமாதம் கைநிறைய பணம் பெற்றுக்கொண்டு அவர்களை சுதந்திரமாக செயற்பட அனுமதித்துள்ளனர். ஆனால் அகதி முகாம்களில் தங்கள் தேவைகளை நிறைவு செய்யக் கேட்டு மனுக் கொடுத்தவர்கள், முகாம்களில் அதிகாரிகளின் அடாவடித் தனத்தை நிறுத்தக்கோரிவர்கள் புலி, புலி என முத்திரை குத்தப்பட்டு கேவலமான விசாரணைக்குப்பின் சிறப்பு முகாம் (சிறப்பு சிறச்சாலை) களுக்கு மாற்றப்படுவது தொடர்கதை.

அப்பாவி அகதிகள் மேல் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இந்த மனித உரிமை மீறல்கள், சனநாயக விரோத நாடவடிக்கைகள், நிர்ப்பந்த வெளியேற்றங்கள் தமிழகத்திலும்,


14 பக்கம் பார்க்க .

### மனித வாழ்வும் சமூக உருவாக்கமும் (தொடர் சுமைகள் 15)

# முதலாளித்துவ அரசியல்

இன்றைய சமூக அமைப்பில் விளம்பரத்தின் பங்கு எவ்வளவு முக்கித்துவம் வாய்தது என்பதையும், அதேவேளையில் அது மக்களை சுரண்டுவதற்கும் எந்தளவில் உதவிபுரிகின்றது என்பதையும், அதேநேரத்தில் மனிதனின் வாழ்க்கைக்கு பொருளாதாரம் எவ்வளவு முக்கியமோ அந்தளவிற்கு தற்போது உள்ள அரசியல் அமைப்பிற்கு விளம்பரம் முக்கியப்படுகின்றது என்பதை கீழேயுள்ள கட்டுரையில் ஆராய முனைகிறோம்.

உலகில் தற்போது காணப்படும் பொருளாதாரக் கொள்கையானது மக்களின் சகலவற்றையும் நிர்ணயிக்கும் சாதனமாகக் கானப்படுகின்றது. அதாவது இன்று எம்முன்னே கானப்படும் பந்தபாசங்கள், ஆடம்பரப் பொருட்களின் அத்தியாவசியம், .......... இவைபோன்ற பலவற்றின் அடிப்படைக் காரணம் பொருளாதாரம் தான். ஏன் இன்று நடக்கும் யுத்தங்களிற்கும் முக்கியமான காரணம் பொருளாதாரம் தான். ஆதிகாலத்தில் மக்கள் இயற்கையில் இருந்து பெற்றுக் கொண்டவற்றை பயன்படுத்தி வாழ்ந்தனர் அதாவது அவர்கள் இயற்கையை நம்பி வாழ்ந்தனர் காலப்போக்கில் மனிதனின் தேவை அதனடிப்படையிலான தேடலைத் தொடர்ந்து மெதுவாக முன்னேறலானான் அப்போது இவன் இயற்கையில் இருந்து பெற்றுக்கொண்டவற்றை அடப்படையாக வைத்து அவற்றைப் பண்படுத்தி அதன்மூலம் கிடைக்கும் பொருட்களைக் கொன்டு வாழத் தொடங்கினான். அவ்வாறு வாழ ஆரம்பித்தவனுக்கு இன்னும் அதிகமாகத் தேவைப்படவே அவற்றின் அடிப்படையிலான தேடலைநோக்கி நகர்ந்ததன் மூலம் தான் தற்போது காணப்படும் தொலைத் தொடர்பு சபதனங்கள், கம்பியூட்டர்கள், .......... போன்றவற்றை பெற்றுக்கொண்டான். இவ்வாறான மனிதனின் வளர்ச்சிக்கு தேடல் ஒரு மக்கிய பங்கை வகித்த போதிலும் அத்தேடலின் விழைவைப் பேற்று அதைப் போருளாக மாற்றி தனது தேவையைப் பூர்த்தி செய்ய பொருளாதாரம் தான் முக்கிய பங்கை வகித்தது, வகிக்கின்றது.



ஏன் இன்று பாதையோரங்களில் தமது வயிற்றை நிறப்புவாற்காக மற்றவர்களிடம் கையேந்தும் மக்கள் தோகை அதிகமாகிவரும் அதேநேரம் தமது தேவைக்கு அதிகமாக பனத்தையும், அதிகாரத்தையும் வைத்து தமது தாம் நினைத்தவற்றை செய்து முடிக்கும் அதிகாரவர்க்கத்திற்கும் இடையில் காணப்படுவது பொருளாதார வேறுபாடுதான். இவற்றைவிட இன்று படித்து பட்டம் வாங்கும் பலர் தமது பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக தம்மை பல பல்தேசியக்கம்பனிகளிடம் விற்கின்றனர். வளர்ந்துவரும் நாடுகளில் எத்தனையே உயர்மட்டப் படிப்பை முடித்தவர்கள் இன்று தம்மை முதலாளித்துவ நாடுகளில் விலைபேசி விற்கின்றனர் இவற்றிற்கு அடிப்படைக்காரணமும் பொருளாதாரம் தான். இவ்வாறு மக்களின் அன்றாட வாழ்கையில் நிகளும் நிகழ்சிகளைக் கூட பொருளாதாரம் நிர்னயிக்கிள்றது. இப்படிப்பட்ட பொருளாதரரத்தில் இன்று விளம்பரம் எவ்வளவு பங்கை வகிக்கின்றது என்பதைப் பார்ப்போம்.

மேற்கூறியது போல உலகில் பொருளாதாரம் எவ்வளவு மனிதனின் வாழ்கையில் முக்கியமாக உள்ளதோ அதேபோலத்தான் சந்தைப்படுத்தல் பொருளாதாரத்தில் முதலாளிகளுக்கு விளம்பரம் முக்கியமாக உள்ளது. இதன் அடிப்படையில் தான் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை சந்தைப்படுத்தும் முகமாக உற்பத்தி செய்யப்பட்ட பொருட்ளை மக்கள் முன்னிலையில் சிறந்த தரம்வாய்த பொருட்கள் எனக் கூறி அவற்றில் கானப்படும் விசேடதன்மைகள் இவை எனவும் கூறி மக்களை ஏமாற்றி விற்கின்றனர். இவ்வாறு பொருட்களுக்கு விளம்பரம் செய்வதற்காக இவர்கள் கண்டுபிடித்த வளிமுறை மக்கள் தொடர்புச்சாதனங்கள். இவ்மக்கள் தொடர்புச் சாதனங்கள் ஊடாக தமது பொருட்ளின் நிலையை, விலையை மக்களுக்கு அறிவிப்பதன் மூலம் மக்களை இலகுவில் கவர்ந்து விடுகின்றனர். உதாரணத்திற்கு தொலைக்காட்சியைப் பார்போமானால் அடிக்கடி ஒவ்வொரு பொருட்களுக்கும் விளம்பரம் வந்தபடிதான் இருக்கும். இவ்வாறு இவர்கள் விளம்பரப் படுத்தும் பற்பசை விளம்பரத்தை பார்போமாயின் ஒரு குறிப்பிட்ட நிமிட வித்தியாசத்தில் பலவகையான பற்பசைகளுக்கு விளம்பரம் செய்கின்றனர். இதில் ஒரு பற்பசைக்கு பற்களில் துவாரம் வராது

# அமைப்பில் விளம்பரம்

பாவிப்பதற்கு உகந்தது என்றும், அடுத்த பற்பசை விளம்பரத்தில் இது பற்கள் வெண்மையாகப் பிராகாசிக்க உகந்தது எனவும் மற்றயதில் பற்களின் மிளிறியினைப் பாதுகாக்க உகந்தது என்றும் கூறப்படுகிறது. ஆனால் அவை அனைத்தும் உண்மைதானா என்று மக்களை சிந்திக்கவிடாதபடி அவ்விளம்பரப் படங்களைத் பலலட்சம் டொலர்களை செலவிட்டு தயாரிக்கின்றனர். இவ்வாறான விளம்பரங்கள் மனிதனின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பண்டங்களுக்க மட்டுமல்லாமல் மனிதனைக் கொல்ல பயன்படுத்தும் ஆயுதங்களுக்கும் உண்டு. உற்பத்தி செய்யப்படும் பொருட்களை சந்தைப்படுத்தப்படவேண்டின் அவற்றிற்கு இந்த முதலாளித்துவ பொருளாதாரத்தில் விளம்பரம் அவசியப்படுகின்றது. காரணம் அவ்விளம்பரங்களின் ஊடாகத்தான் மக்கள்மீது தமது சுரண்டலை நடத்தமுடிகிறது. இதில் பல்தேசியக் கொம்னிகள் தமது உற்பத்திக்கான மூலப் பொருட்களை ஒரு வளர்ந்துவரும் நாட்டில் இருந்து பொற்றுக் கொன்டால் அவ் மூலப்பொருளைக் கொண்டு தயாரிக்கப்படும் பொருட்களை மனித உழைப்பிற்கு குறைந்த செலவு செய்யக் கூடிய இடத்தில் அதை பொருளாக மாற்றி அப்பொருளையே மீண்டும் மூலப் பொருள் பெறப்பட்ட இடத்திற்கு விற்கப் படும் போது அங்கு விளம்பரம் பலமாக செய்யப்பட்டு விற்கப்படுகின்றது. இதன்மூலம் மக்களை ஏமாற்றுவதுடன் மட்டுமல்லாது தமது உற்பத்திக்கான செலவைக் குறைத்து விளம்பரத்தின் மூலம் மக்களிடையே சுரண்டுகின்றனர்.

இது தற்போதைய உற்பத்தி செய்யப்படும் பண்டங்கள் தொடர்பானவை. இதேபோல உற்பத்திப் பொருட்கள் இன்றி தாம் தமது வாழ்க்கையை வழப்படுத்திக் கொள்வதற்காகவும் விளம்பரங்கள் பயன்படுத்தப்படுகின்றது. அதாவது ஒருசிலர் தாம் வாழ மற்றவர்களிடம் சுறண்ட வேண்டும் என்பதற்காக தம்மை மக்களின் தொண்டன் என விளம்பரம் செய்யும் காலமும் உன்டு. இப்படிப்பட்ட விளம்பரங்களை அனேகமா ஒரு நாட்டில் தேர்தல் நடக்க நிட்சயிக்கப்ட்டிருக்கும் தருணத்தில் கண்டு கொள்ளலாம். இவர்கள் உண்மையில் மக்களின் தொண்டர்களா என்று ஆராய்ந்தால் இலர்கள் தான் குண்டர்களை வைத்து மக்களிடம் கொள்ளையடிப்பவர்கள். இவர்கள் ஒரு முதலாளித்துவ நாட்டின் முதலாளித்துவ அரசில் வாதிகளாக இருக்கும் போதே இவர்கள் இப்படிப்பட்டவர்கள் என்பதை சொல்லாமல் புரிந்துவிடும். அனால் தோர்தல் காலங்களில் மட்டும் வாழ்கையில் செய்யாத வேலைகளையும் (தெருவோரங்களை துப்பரவு செய்தல், ஏழை மக்களின் குடிசைகளுக்குச் சென்று நலம் விசாரித்தல்) தமது விளம்பரத்திற்காக செய்கின்றனர். இவர்களை விட இன்னும் ஒரு மாதிரியான விளம்பரம் உண்டு அதாவது முதலாளித்துவ அரசியலை எதிர்பவர்கள், நாங்கள் நாம்தான் உழைக்கும் வர்க்கத்தின் தொண்டர்கள, உழைக்கும் வர்கமே எமது எஜமானர்கள் எனக் கூறி தமது வாழ்கையை வளம்படுத்தும் போலி உழைக்கும் வர்கத்தின் தொண்டர்களும் உள்ளனர் இவர்கள் எவ்வாறு தம்மை விளம்பரப் படுத்துகின்றனர் எனின் தாம் உழைக்கும்மக்களின் பால் பாசமும் அன்பும் கொண்டவர்கள் எனக்காட்டும் முகமாக கவிதைகளையும், கட்டுரைகளையும், கதைகளையும், குறு நாவல்களையும் எமுதி தமது சொந்தச் செலவிலேயே வெளியிடுபவர்கள். இவர்களால் வெளியிடப்படும் இக்கவிதை, கதை, கட்டுரைகள் மூலம் தாம் மக்கள் மத்தியில் பாசம் கொண்டவர்கள் என்றும், தாம் தலைசிறந்த எழுத்தாளர்கள் என்றும் விளம்பரம் செய்கின்றனர். இவர்களைப் பொறுத்தவரை விளம்பரம் என்பது தமது வாழ்கையை வழப்படுத்தும் நோக்கில் செய்யப்படும் அரசியல் விபச்சாரத்திற்கான ஓர் விளம்பரமேயாகும். இவர்களுக்கும் பதவிகள் அந்தஸ்துக்கள் கிடைக்குமாயின் மக்களை சுரண்டுவதில் முன்னனி வகிப்பார்கள்.

இவ்வாறு பலவிதமான சுரன்டலுக்காக இன்று விளம்பரம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. காரனம் இன்றை அரசியல் அமைப்பு முறைதான். அனால் இது விளம்பரம் எனப்படும் அந்த செயற்பாட்டின் தவறல்ல மாறாக அது எவரால் எங்கு எதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது என்பதைப் பொறுத்ததே. விளம்பரம் என்ற பதத்தை மக்கள் மீது சுறண்டலைத் தினிப்பதற்காகப் பயன்படுத்தாது, நிஜமானவற்றைக் கூறும் நிலையில் இருக்குமாயின் அது மக்களுக்கு பயனுள்ள பதமாக மாற்றப்படும். இதற்கு இன்றைய இவ் அரசியல் அமைப்பு முறை அடம் கொடுக்கமாட்டது. மாறாக இவ்வரசியல் அமைப்பு முறை மாற்றப்பட்டு புதிய சுறண்டல் இற்ற சமூகமுறை உருவாகும் போது மாத்திரமே மக்களுக்கு பயனுள்ள பதமாக விளம்பரம் விளங்கும்.

1ம் பக்கத் தொடர்

தமிழ் மேலாதிக்க வர்க்கம் வெள்ளை ஆதிக்க அடிவருடிகளாகவும், சிங்களை மேலாதிக்க வர்க்கமும் இணைந்து மேற்படி தேசிய முரண்பாட்டிற்கு அடிக்கல்லிட்டனர். இவ்வரலாற்று நிகழ்வானது இலங்கை சுதந்திரம் பெற்ற பிற்பாடும் தொடர்ந்தது. சிங்கள மேலாதிக்கம் ஆட்சிக்கு வந்தபின் தமிழ் மேற்குடி, தேசிய முரண்பாட்டை அடிப்படையாகக் கொண்டு தமிழ் தேசிய இனத்தையே விலைபேசி விற்க முற்பட்டது. மேற்படி மேலாதிக்க தமிழ், சிங்கள குழுக்களுக்கிடையான முரண்பாடு முற்றிய போது தத்தம் வசதிக்கேற்ப இனவெறியை வெளிக்காட்டினர். அனைத்துச் சிங்கள அரசுகளும், தமிழ், முஸ்லீம், மலையக மக்கள் மீது சிங்கள ஆதிக்க ஒடுக்கு முறையை மேற்கொண்டனர், மேற்கொள்கின்றனர். மாற்றிற்கு தமிழ் மேலாதிக்க வர்க்கம் ஆரம்பத்தில் மக்கள் அடிப்படையிலான போராட்டத்தை மேற்கொள்ளாது வெறும் பாராளுமன்ற நலனின் அக்கறைகொண்டு, தமது இருக்கைகளைக் காத்துக் கொள்ள தேசிய வெறியை தமிழ் மக்கள் மத்தியில் பரப்பினர். (இங்கு கூட்டணி, தமிழ் மிதவாதக் கட்சிகளின் செயற்பாடு குறிப்பிடத்தக்கது.) .

பின் விடுதலை இயக்கங்கள் உருவாகின ஆரம்ப நிலையானது யுத்த அளவில் சரியான பாதையில் (அரசியலைப் பொறுத்தவரை அங்கும் தமிழ் மேலாதிக்க வர்க்கத்தின் தேசியவாதம் காணப்பட்டது) சென்ற போதும் இன்றுள்ள நிலை கவலைக்கிடமானது. அரசு எந்தளவு சிறுபாண்மை இனங்களை கொலை செய்கின்றதோ அதே ளெவு தமிழ் தேசிவாதம் மாற்று சிறுபான்மை இனங்களையும், சிங்கள உழைப்பானி மக்களையும் கொலை செய்கின்றது.

பேச்சாளர் இருவரும் சிங்கள, தமிழ், முஸ்லீம், மலையக மக்களையும் மேற்படி தேசிய இனங்களின் தலைமைகளையும், பரிந்தே கருத்துத் தெரிவித்தனர். இருபேச்சாளரும் மக்கள் நலன் வேறு, தலைவர்கள் நலன் வேறு என்ற கருத்தை வலியுறுத்தினர். மேலும் உரையில் பல வரலாற்று நிகழ்வுகளையும் கூறுகின்றனர்.

போராசிரியர் மாற்றாக, ஜெகன் பெரேரா சிங்கள அரசுகளை கடுமையான முறையில் குற்றம் சாட்டியதுடன் சிங்கள மக்கள் மீதான புலிகளின் நடவடிக்கைகளையும் மேலோட்டாக ஆராய்ந்தார். தமிழ் போராசிரியர் அரசைக் குறைகூறிய போதும் புலிகளைப் பற்றி நேரடியாக கருத்து ஏதும் தெரிவிக்கவில்லை. ஆனால் தமிழ் தேசிய வேறியை பலமுறை கடுமையாகச் சாடினார்.

2) இரண்டாவது பகுதியில் புலிகளின் பிரதிநிதியும், ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதியும் உரையாற்றினர்.

புலிகளின் பிரதிநிதி:– ஆரம்பத்தில் நோர்வே அரசையும் உலக சமாதான வேட்கையையும் புகழ்ந்து பாராட்டினார். பின் தனது வரலாற்றுப் பகுதியில் எவ்எப்போது சிங்களவன் தமிழனைக் கொலை செய்தான் என அனுஅனுவாகப் புட்டுபுட்டு வைத்தார். இவரின் இலங்கை அரசியல் வரலாறு துட்டகைமுனு எல்ளாளன் போரில் இருந்து அரம்பமாகியது. மாசிமாத அரம்பத்தில் இலங்கை இராணுவம் கிழக்கிலங்கையில் தமிழர்களை கொன்றதில் முடிவுற்றது. தேசிய இனப்பிரச்சனையை புலிப்பிரதிநிதி சிங்களவனுக்கும், தமிழனுக்குமான பிரச்சனையாகவே வலியுறுத்தினார். பலமுறை சிங்களவன் தமிழன் என்ற சேற்பதத்தைப் பாவித்ததுடன் தேசிய இனத் தலைமையையும் மக்ளும் ஒன்று என நிறுவ முற்பட்டார். இதன் அடிப்படையில் புலிகளே தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என கூறினார்.

> ***17 சுமைகள் சில காரணங்களால் தாமதமாகவே வெளிவருகின்றது. சுமைகள் குழு***

11ம் பக்கத் தொடர்

உலகளாவிலும் உள்ள புரட்சிகர சனநாயக அமைப்புக்கள், மனித உரிமை அமைப்புக்களால் கண்டனம் செய்யப்படுகிறது. ஏன் அய்நாவின் சர்வதேச அகதிகள் உயர் ஆணையகம் கூட தலையிடுகின்ற அழவிற்கு இருந்தது. அகதிகள் பராமரிப்பில் அரசு மேற்கொள்ளும் அணுகுமுறைகள் சில.

1) 1992ல், 200 முகாம் இருந்தது. தற்போது 115 முகாம் மட்டும் உள்ளது. 40000 அகதிகள் 2 ஆண்டுகளில் அனுப்பப்பட்டுள்ளனர். 7000 பேர் அனுப்பப்பட இருக்கையில் இந்தியாவை குலுக்கிய பிளேக் நோய் அகதிகள் பயணத்தை இரத்து செய்தது. 1995 தை மாதம் இவர்கள் ஏற்பாடுள்ளது. .

2) மண்டபம், கொட்டப்பட்டு, விளாங்குடி, பெரியார் நகர், ஆணையூர் முகாம் இவை மட்டுமே ஒழுங்கமைக்கப்பட்ட முகாம்கள். மற்றவை எல்லாம் வெய்யிலிற்கும் மழைக்கும் படும் வேதனைகள் கொஞ்சநஞ்சமல்ல. ..

3) 92 மார்கழியில் வீசிய புயலில் பாம்பாறு அணை அகதிமுகாம் பெரியளவில் நிலைகுலைந்து போனது, தம்பரி அரூர் முகாம் தீவிபத்தில் 40 குடிசைகள் எரிந்து சாம்பலானது. இன்வரை மனுக்கள் போட்டு மைதான் தீர்ந்தது, முகாம் திருத்தப்படவில்லை.

4) பெரும்பாலான முகாம்களில் மலசலகூட வசதி, தண்ணீர், மின்சாரம் (இணைப்புள்ள இடங்களில் எப்போ என்ன நடக்கும் என்ற வகையில் தாறுமாறுமான பாதுகாப்பற்ற ஏற்பாடு) எதுவும் இல்லை.

5) சிறப்பு முகாம்களைப் போறுத்தவரை கைதர் மகாலில் 415 பேர், இதில் 126 சிறுவர்கள் கூட புலி எனக்காட்டப்படுகிறது. தனி ஆண்கள் புலி என வாக்குமூலம் கொடுத்தவர்கள் திப்பு மகாலில் 113 பேர்.

ஆ) வேலூர் சிறப்பு முகாமில் 514 பேர் .

இ) எம்.ஜி.ஆர் மாவட்டம் பழல் முகாமில் ஈ.பி.ஆர்.எல்.எவ், புளட், ரெலோ, ஈ.ன்.டி.எல்.எவ் என 930 பேர் சேலம் தம்பட்டி முகாமிலும் உள்ளனர்.

ஈ) பதிவு செய்தவர்கள், அதிகாரிகளை எதிர்த்து கேள்விகேட்டவர்கள் பேசியவர்கள் என 162 பேர் துறையூர், செங்கல்பட்டு, மேலூர், திருவிடைமருதுார் முகாம்களில் உள்ளனர். சிறப்பு முகாம்களில் உள்ளவர்கள் வெளியில் நடமாட முடியாது. யாரும் அவர்களைச் சென்று பார்க்க முடியாது. வெளியுலகத் தொடர்பின்றி சிறப்புச் சிறச்சாலை உள்ளது. 25-07-94 தொடக்கம் துறையூர் அகதிமுகாமில் உணவு வசதியின்மை, செய்திகள் படிக்கத்தடை, தண்ணீர் வசதியின்மை, நேர்கோணலுக்கு தடை இவற்றிற்கு தக்க பரிகாரம் காணுமாறு அரசைக் கேட்டு தொடர் உண்ணவிரதம் இருந்தனர்.

6) முகாம்களில் வாழும் அகதிகள் வெளியே வேலைக்குப் போக இருந்த சுதந்திரத்தைக் கூட இழந்துள்ளனர். காலை 7 மணிக்குப் பின் போய் மாலை 6 மணிக்கு முன் வந்து விடவேண்டும். எங்கு யார் இதற்கு வேலை கொடுப்பார்கள்?

7) வெளியூர் செல்ல வேண்டின் வருவாய் ஆய்வாளர் முதல் தாசில்தார்வரை அனுமதிக் கையொப்பம் வாங்கிச் செல்லவேண்டும். அதுவும் கூடியது 3 நாள்களுக்குத்தான். அனுமதியின்றிப் போனாலோ, ஒருநாள் அதிகம் வெளியில் இருந்தாலோ அதிகாரிகள் முதல் ஞ டீசுயுஹேர் வரை விசாரணைக்குள்ளாக வேண்டும்.

8) தமிழ் நாட்டில் எங்காவது கொள்ளை, கொலை, குண்டுவெடிப்பு மற்றும் வீரப்பன் நடமாடும் பகுதியை ஒட்டிய முகாம்களில் திடீர் திடீர் என சுற்றி வளைத்து முகாம்கள் பரிசோதனை செய்யப்படுதல்.

9) அரசு உதவியைப் பொறுத்தவரை அகதி குடும்பத் தலைவருக்கு 150 ரூபா 12 வயது மேலுள்ளவர்களுக்கு 120ரூபா 12 வயது கீழ் உள்ள முதல் பிள்ளைக்கு 75 ரூபா அதைவிட சிறுவர்களுக்கு 37-50 ரூபா ஒரு மாதத்திற்கு கொடுக்கப்படுகிறது. அரிசி 12 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தினம் 400 கிராம், 12 வயதுக்கு கீழ் உள்ளவர்களுக்கு 200 கிராம் எனவும், குடும்பத்திற்கு சினி 2 கிலோ கூடியது. மண்ணெண்னை மாதத்திற்கு 3 லிட்டர் முதல் 10 வரை. இந்த உதவிப் பணத்தை பொருளை வைத்து வயிற்றின் எந்த மூலையை நிறப்பமுடியும்.

10) அகதிகளின் அன்றாட வாழ்வு பசி, பட்டினி, கர்ப்பணிக்கு மருந்து இல்லை, பிள்ளைக்கு ஊட்டச்சத்துப் பால் இல்லை, எல்லாவற்றிற்கும் பணம் இல்லை. வேலைக்குப் போக வழியில்லை. இவற்றால் விரக்தி அடைந்த சிலர் இச்சமூகத்தில் நிலவும் சீரழிந்த சமூக நடவடிக்கைகளுக்கு, விரைவாக பணம் சம்பாதிக்கும் தொழில்களுக்கு இரையாகியுள்ளனர்.

11) முகாம்களில் சீர்திருத்த வேலைகளைச் செய்து வந்து தொண்டு நிறுவனங்கள் கூட இயங்கத் தடை விதித்துள்ளது அரசு.

12) அகதி மானவர்களின் கல்லிக்குக் கூட சாவு மணியடிக்கப்பட்டுள்ளது. ஆயிரம் லட்சம் என லஞ்சம் கொடுத்து படிக்க அகதிகளுக்கு என்ன வழி? கல்லி கற்கும் வயதில் உள்ள சிறுவர்கள் லாட்ரி சீட்டு வியாபாரம், மதுபாணக் கடை, மளிகைக் கடைகளில் மிகக்குறைந்த கூலியில் வெலைசெய்கிறார்கள். மேல்படிப்பு இழந்த அண், பெண் மாணவர்களும் விரக்தியில் உள்ளனர்.

இப்படியாக தமிழகத்தில் உள்ள எந்த வித மனிதாபிமானமும் இன்றி நடத்தப்படுகிறார்கள். இவற்றை எந்த வழியிலும் வெளிப்படுத்துகிற அதற்காகப் போராடுகிற உரிமை அகதிகளுக்கு மறுக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் உள்ள புரட்சிகர சனநாயக அமைப்புகள் மனித உரிமை அமைப்புகள் அகதிகளுக்காக குரல் கொடுக்க முன்வரும் போது புலி சார்பு ஆயுதக் கலாச்சார ஆதரவாளர்கள் தமிழக அமைதியைக் குலைப்பவர்கள் என்று கூறி தேசியப் பாதுகாப்புச் சட்டம் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் கைது செய்து அடைத்து வருகிறது. இவற்றை தாண்டியும் தமிழக மக்களின் ஆதரவுக்குரல்கள் கேடஇடுக்கொண்டிருக்கிறது.

புலம்பெயர்ந்த தமிழீழத்தவர்கள் இந்தியாவில் மட்டுமல்ல ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளிலும், மத்திய கிழக்கு நாடுகளிலும் உள்ளனர். ஒப்பிட்டளவில் தமிழகத்தில் உள்ள அகதிகளை விட அந்தநாட்டு அரசுகள் அகதி அந்தஸ்து கொடுத்து அடிப்படை வாழ் நிலைக்கும் ஒரளவு உத்தரவாதம் கொடுத்துள்ளது. சுவிடன் நாடு மட்டும் அங்குள்ள 92க்குப் பின் வந்த அகதிகளை திருப்பி அனுபஷ ஶ்ரீலங்கா அரசுடன் ஒப்பந்தம் செய்துள்ளது. அந்தநாடுகளில் பரவிவரும் இனவெறி, நிறவெறி பாசிச சக்திகள் வெளிநாட்டு அகதிகள் மீது தாக்குதல் நடத்துகின்றனர். அவர்களின் தாக்குதலுக்குப் பலியான சர்வதேச அகதிகளில் தமிழீழ அகதிகளும் அடங்குவர். அங்குள்ள அகதிகள் தங்கள் பிரச்சனைகளை எடுத்துக் கூறவும், எழுதவும் சிறு அளவில் போராடவும் கூட அந்நாட்டு அரசுகள் தடைவிதிக்கவில்லை.

ஆனால் உலக தமிழர்களின் சக்கரவர்த்திகள் ஆளும் தமிழ்நாட்டில் தமிழீழ அகதிகளுக்கு அகதி அந்தஸ்து கூட கொடுக்கப்பட இல்லை. அகதிகள் தங்களது வாழ்வின் அவலங்களை தமிழக சகோதரர்களிடம் வெளிப்படுத்த உரிமை இல்லை. அகதிகள் பேச ஏழுத கூட்டம் கூட்ட தங்களது

16ம் பக்கம் பார்க்க

**Avsender/ From**
**Sumaihal**
**Postboks 415**
**9001 Tromsø, Norway**

# BLAD

**Mottaker/ To**

**15 பக்கத் தொடர்**

கோரிக்கைகளை வெளிப்படுத்தினால் சிறப்பு முகாம் பெயர்மட்டும் தமிழில் போட்டு வைத்துள்ளனர். அகதி மக்களின் குரல் புலிகளின் உறுமல்களாக, அகதி முகாம்களை தீவிரவாதிகளின் கோட்டைகளாக சித்தரிக்கும் நயவஞ்சகம் மட்டும் நாவில் தவழ்கிறது. தமிழ் தழிழ் உலகத் தமிழர் மாநாட்டுக்கு கோடிகோடியாகக் கொட்டும் இந்த தமிழ் வளர்க்கும் விளம்பரத் தலைவர்கள் தமிழகத்தில் சோமாலிய அகதிகள் போல் மாறிக் கொண்டிருக்கும் தமிழீழ அகதிகளை அவர்களது பிரச்சனைகளை ஏன் கவனிக்க மறுக்கிறார்கள்? தமிழ் மக்களின் அழிவில் தமிழை வளர்க்கும் புரட்சிகரத் தலைவர்களாக இருப்பதால் அவர்களால் தமிழீழ அகதிகளை மட்டுமல்ல, தமிழக மக்களையும் காப்பாற்ற மாட்டார்கள். உணர்வுள்ள தமிழ் மக்கள் விழிக்க வேண்டிய வேளையிது. உலக தமிழ் மாநாட்டில், தமிழ் மக்களின் பிரச்சனைகள் பேசப்படவேண்டும். தமிழ் மொழியை தமிழர்கள் வாழ்வில் இருந்து அகற்றத்துடிக்கம் துரோகக் கூட்டத்தை அம்பலப்படுத்த வேண்டும். மாநாட்டில் பங்குபெற்றும் உணர்வுள்ள உலனத் தமிழர்களது கடமையாக இருக்கவேண்டும்.

இன்று உலகில் அகதிகள் பிரச்சனை மையப்பட்டுள்ளது. உள்நாட்டு இனவெறி மதவெறி மோதல்களாலும் ஆளும் அரசுகளின் வல்லரசியங்கலாலும் தேசிய இன ஒடுக்குமுறையாலும் வல்லரசியங்களின் புதிய காலனிக் கொள்ளை சுரண்டல் ஒடுக்கு முறைகளால், யுத்தங்களால் மண்ணின் மைந்தர்கள் தாய்தேசத்தை விட்டு தங்கள் உயிர் பாதுகாப்புக்காக எந்தப் பெரிய கடல்களையும், மலைகளையும், ஆறுகளையும் கடக்க நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள். தஞ்சம் புகுந்த நாடுகளிலும் ஏதோ ஒருவகையில் தம்மீதான மேலதிக ஒடுக்குமுறைகளை தனிமைப்படுத்தல்களை உனர்கிறார்கள். இன்று வல்லரசியம் உலகம் தழுவியதாக இருப்பதால் தேசிய ஒடுக்குமுறையுடன் தனது ஜீவனைப் பிணைத்துள்ள வல்லரசியத்தின் வலைகளில் இருந்து உலகின் எந்த மூலையிலும் அகதிகள் புலம்பெயர்ந்தவர்கள் தப்பி வாழமுடியாது. இதனால் ஒரு காலத்தில் உள்நாடு அரசின் கொலைக்கரங்களுக்கு தப்பி ஓடிய அகதிகள், இப்போது அகதி வாழ்வில் ஏற்பட்ட வெறுப்புகளால் மீண்டும் தாய் மண்ணுக்குப்போய் உள்ளநாட்டு கொலைவெறி அரசால் கொல்லப்பட்டாலும் நமது மண்ணில் சாவோம் என்கிற அளவுக்கு தயாராகிவிட்டார்கள்.

ருவண்டா அகதிகள் சைரியாவிலும், தன்சானியாவிலும், சோமாலியா, பாலஸ்தீனம், குர்திஸ்தான், போஸ்னியா என பட்டியல் நிற்கின்றது. ஒப்பீட்டளவில் தமிழீழ அகதிகள் தான் உலகின் பலநாடுகளில் சிதறிக்கிடக்கின்றனர். தமிழீழ அகதிகள் தாங்கள் தஞ்சம் புகுந்துள்ள நாடுகளில் சர்வதேச சட்டத்திற்குட்பட்டு அகதிகளின் உரிமைகளுக்காக குரல் கொடுத்த போதிலும் அந்தநாடுகளில் உள்ள மக்களுக்கு தங்களது நிலமையைப் புரியவைத்து மக்களுக்கு இடையிலான உறவை வளர்க்க வேண்டும்.

ஸ்ரீலங்காப் பேரினவாத அரசின் வல்லரசியங்களின் தேசிய இன ஒடுக்குமுறைக்கு முடிவுகட்டும் தமிழீழ மக்களது தேசிய சுதந்திரம் மட்டுமே அகதி வாழ்வுக்கு, வேர்பிடுங்கப்பட்ட வாழ்வுக்கு, புலம்பெயர்ந்த வாழ்வுக்கு முற்றுபுள்ளி வைக்கும்.

**மத்திய மாநில அரசுகளே!**

தமிழீழ அகதிகளுக்கு "அகதி அந்தஸ்து வழங்கு!
அகதிகளின் அடிப்படை ஜனநாயக உரிமைகளுக்கு உத்தரவாதம் கொடு!
தமிழீழ அகதிகளின் அடிப்படைத் தேவைகளை நிவர்த்தி செய்!

**தமிழக இந்திய மக்களே!**

தமிழீழ அகதிகளின் நியாயமான கோரிக்கைகளுக்கு ஆதரவு தாருங்கள்!
தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்துக்கு ஆதரவு தாருங்கள்!
மத்திய மாநில அரசுகளுக்கு நிர்ப்பந்தம் கொடுங்கள்!

**தமிழீழ அகதிகளே!**

அகதி முகாம்களில் நமது அடிப்படை உரிமைகளுக்காகப் போராடுவோம்!
நமது துன்ப துயரங்களை உலக மக்களுக்கு எடுத்துரைப்போம்!
நமது வாழ்வை மாற்ற நாமே போராட வேண்டும்!

## தமிழீழ தேசபக்த முன்னணியினர் கழகம் (த.தே.மு.க)

PATRIOTIC VANGUARD'S ORGANAIZATION (PVOT)